விலை ரூபா 5-00

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

அசல் 22 கரட் தங்க
நகைகளுக்கு யாழ் நகரில்
சிறந்த ஸ்தாபனம்
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
[கி-2127)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஆடி 08 செவ்வாய்க்கிழமை (24.07.2001) தொலைபேசி: 3378 ஒலி: 225

★ பிந்திய செய்தி ★

## அதிகாலைவேளை புலிகள் அதிரடித்தாக்குதல்

# கட்டுநாயக்கா விமான நிலையம்

# தீபற்றிஎரிகிறதுவிமானங்கள்சேதம்

### தாக்குதல் தொடர்கிறதுஊரடங்குஅமுல்

(கொழும்பு)

**கட்டுநாயக்கா சர்வதேச விமானப் படைத் தளத்தினுள் விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படை ஊடுருவித் தாக்குதல் நடத்திக் கொண்டிருப்பதாகப் பிந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன.**

**கறுப்பு ஜூலை நாளான நேற்றைய தினத்தை நினைவு கூர்ந்து இன்று அதிகாலை 3.55 மணிக்கு இத்துணிகரத் தாக்குதல் சம்பவம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.**

கட்டுநாயக்கா விமானப்படைத்தளத்தில் உள்ள எண்ணைத் தாங்கி ஒன்றில் தீப்பிடித்ததைத் தொடர்ந்து விமானத்தளம் தீச்சுவாலை விட்டு எரிய ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் இத்துணிகரத் தாக்குதல் இச்செய்தி எழுதும்வரை நடது கொண்டிருப்பதாக எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

அதி உயர்பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள கட்டுநாயக்கா விமானப் படைத் தளத்தின் மீதான புலிகளின் துணிகரத் தாக்குதலினால் படை உயரதிகாரிகள் மத்தியில் அதிர்ச்சியும் ஆச்சரியமும் ஏற்படுத்தியுள்ளதாக இராணுவ உயர் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இச்சம்பவத்தை அடுத்து பாதுகாப்புசபை உடனடியாக கூடி ஆராய்ந்துவருவதாக தகவல் வெளியாகிஉள்ளது;

இச்சம்பவத்தையடுத்து பேலதிக விமானப் படையினரின் விமானப்படைத் தளத்திற்கு விரைந்து உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது இதனால் விமானப் படைத் தளத்தில்இருந்த விமானங்கள் சேதமடைந்துள்ளதாகவும் இராணுப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் கருணரத்தினா அறிவித்துள்ளார். (வ)

### ஊரடங்கு அமுல்

கொழும்பில் இனக்கலவரம் வெடிக்கலாம் என்ற அச்சத்தினால் கொழும்பு கட்டுநாயக்கா, நீர்கொழும்பு, யாஎல உட்பட்ட பகுதிகளில் ஊரடங்கு சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளது. (வ)

### எட்டுவிமானம் சேதம்

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் இன்று அதிகாலை விடுதலைப்புலிகள நடத்திய அதிரடித்தாக்குதலில எட்டு குண்டுவீச்சு விமானங்கள், இருஹெலிஹெப்டர்கள் அழிக்கப்பட்டதாகவும் ஓடுபாதைகள் சேதமடைந்துள்ளதுடன் விமானநிலைய வாகனங்களும் சேதமடைந்து உள்ளன. (இ)

### விமானங்கள் அனுப்பி வைப்பு

(கொழும்பு)

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் விடுதலைப் புலிகள் தொடுத்துள்ள அதிரடித் தாக்குதலினால் அங்கு தரித்து நின்ற விமானங்கள் இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் விமான நிலையங்களுக்கு பாதுகாப்புக் கருதி பறந்துள்ளன. (இ)

## நடிகர் திலகத்தின் புகழுடல் தீயுடன் சங்கமம்

(சென்னை)

மறைந்த நடிகர் திலகம் பத்மஸ்ரீ சிவாஜி கணேசனின் இறுதிக்கிரியைகள், நேற்று நடைபெற்று, பெசன்ட் நகரில் உள்ள மின்சாரத் தகனமையத்தில் அவரின் புகழுடல் தீயுடன் சங்கமித்தது.

சென்னை தியாகராகநகர் செவாலியே சிவாஜிகணேசன் வீதியில் உள்ள 'சாந்தி இல்லம்' வீட்டில் இருந்து தகனக் கிரிகைக்காக புகழுடல் எடுக்கப்பட்டபோது லட்சக்கணக்கான மக்கள் கண்ணீர் மல்கி தமது இறுதிஅஞ்சலியை தெரிவித்தனர்.

பல லட்சக்கணக்கான மக்கள் அணிவகுத்து செல்ல பூதவுடல் தாங்கிய ஊர்தி நகர்ந்தது.

திரையுலக நட்சத்திரங்களான சுப்பர் ஸ்ரார் ரஜனிக்காந், கமலஹாசன், விஜய-காந், மற்றும் திரையுலக கலைஞர்கள், இயக்குனர் பாலசந்தர், இசைய

[8ஆம் பக்கம் பார்க்க]

## பல்கலை மாணவர் ஒன்றியத்தின் பதில்

# முற்றாக ஏற்க முடியாதவை

### ஈ. பி. டி. பி. தெரிவிப்பு

யாழ்ப்பாண பல்கலைக் கழகம் மீளத்திறக்கப்பட்டது சம்பந்தமாக மாணவர் ஒன்றியத்தின் பிரதிநிதிகள பின்வரும் உறுதிமொழிகளை உடனடியாக வழங்கவேண்டும். இவ்வாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மென்டிஸ் யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தருக்கு அவசர தொலை நகல் மூலம் அறிவுறுத்தியுள்ளார். அவையாவன

★ பல்கலைக்கழக மாணவர்கள் 23 ஜூலை 2001க்குப் பின் பல்கலைக்கழக சுற்றாடலையோ, வளங்களையோ எந்தவிதமான எதிர்ப்பு நடவடிக்கைக்கும் பயன்படுத்த மாட்டார்கள் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்;

★ பல்கலைக்கழக மாணவர்கள் வன்முறை நடவடிக்கைகள்எதற்கும் பல்கலைக்கழக சூழலை பயன்படுத்த மாட்டார்கள் என்பதை உறுதிப் படுத்த வேண்டும்.

[8ஆம் பக்கம் பார்க்க]

## ஜனாதிபதியின் அழைப்பு வெறும் கண்துடைப்பு

(கொழும்பு)

புதிய அரசியல அமைப்பு தொடர்பாக தமிழ்க் கட்சித் தலைவர்களை அழைத்துப் பேசப் போவதாக ஜனாதிபதி கூறுவது வெறும் கண்துடைப்பாகும. இனப்பிரச்சினை தொடர்பாகவும், அரசியல் அமைப்பு தொடர்பாகவும் எத்தனையோ தடவை பேசியாகி விட்டது.ஆனால் நடைமுறையில ஒன்றும் சரிவரவில்லை;

இவ்வாறுதமிழர்விடுதலைக் கூட்டணியின் உபதலைவர் வி ஆனந்தசங்கரி, அகிலஇலங்கைத் தமிழ் காங்கிரஸ் தலைவர் அ. விநாயகமூர்த்தி, ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் ஜனாதிபதி சந்திரிகாவின் அழைப்பு தொடர்பாகத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக தமிழ்த் தலைவர்கள் மேலும் கூறுத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது;

ஜனாதிபதி சந்திரிகா அரசைத் தக்கவைப்பதற்காக இப்படிப்பேசி வருகிறார்.இது ஒரு சூழ்ச்சியாகவும் இருக்கலாம்.

புதிய அசிரயல் யாப்புக்

[8ஆம் பக்கம் பார்க்க]

## தொல்லை தவிர்ப்புக்குழு திவ்வியனின் கைது விபரத்தை கோருகிறது

யாழ்.பல்கலைக்கழக மாணவன் திவ்வியன் இராணுவத்தினரால் கைது செய்யபபட்டவிவகாரம் தொடர்பாக பூரண அறிக்கை சமர்ப்பிக்குமாறு தொல்லை தவிர்ப்புக்குழு யாழ். பொலிஸ் தலைமையகத்தையும் படைத் தலைமையகத்தையும் கோரியுள்ளது.

ஞகொழும்புமாவட்ட பாராமன்ற உறுப்பினரும், தொல்லை தவிர்பபுக் குழு உறுப்பினருமான ஆர் லோகராஜன் பல்கலைக்கழகமாணவன் திவ்வியன் தொடர்பாக நடவடிக்கைஎடுக்குமாறு சேட்டுக்கொண்டதையடுத்தே தொல்லை தவிர்ப்புக் குழு யாழ்.படைத்தரபபு மற்றும பொலிஸ் தரப்பினரிடம் அறிக்கை கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## நிபந்தனைகளை ஏற்க முடியாது

### யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம் பதில்

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுநேற்று யாழ்பல்கலைக்கழக மாணவர்களுக்கென உபவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை ஊடாக கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளது.

அக்கடிதத்துக்குப் பதில் கடிதமொன்றை யாழ் பல்கலைக்கழகமாணவர் ஒன்றியம் நேற்று பல்கலைக்கழக் மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு அனுப்பியுள்ளது.

யாழ்பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அனுப்பிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அனுப்பப்பட்ட கடிதம் கிடைத்தது. கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் முற்றிலும் ஜனநாயக சுதந்திரத்திற்கு மாறானவையாகும்.

(8ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## செயற்பாடுகள் விரிவாக்கம்

[புலோலி]

வடமராட்சி கிழக்கு குடத்தனையில் இயங்கும் பெண்கள் குழந்தைகள் ஒருங்கிணைந்த பங்களிப்பு மேம்பாட்டுத் திட்ட பெண்கள் ஒன்றியம் தனது செயற்பாடுகளை விரிவாக்கவுள்ளது.

இதற்கான நிதி சேகரிக்கும் முயற்சியில் ஒன்றியம் ஈடுபட்டுள்ளது. (உ-52)

## திருநாள் திருப்பலி

(செயபியன்பற்று)

குடத்தனை பொற்பதி புனித பேதுருவானவர் ஆலயம் கடந்த திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது ஓகஸ்ட் 1 ஆம் திகதி புதன்கிழமை காலை 7 00 மணிக்கு யாழ்மறைமாவட்ட பங்குத்தந்தை வண. பிதா ஜோர்ச் அன்ரனி தலைமையில் திருநாள் திருப்பலியும் திருச் சொரூபப்பவனியும் இடம்பெறவுள்ளது. [செ-42]

## விருதுவழங்கி கௌரவம்

[யாழ்ப்பாணம்]

வண்ணை வட - கிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான பிரதமகுரு து. விவேகானந்தக்குருக்கள் நல்லூர் இலட்சுமணன் தோட்ட வீரமகாளி அம்மன் தேவஸ்தானத்தினரால் அண்மையில் 'சிவாச்சார்யதிலகம்' விருது வழங்கி தங்கப்பதக்கம் சூட்டிக் கௌரவிக்கப்பட்டார். (செ-104)

# தபாலகம் வரும் முதியவர்களின் பணிகளுக்கு முன்னுரிமை வழங்குக

## தபால் நிலையங்களுக்கு அறிவுறுத்து

(மந்திகை)

சமூக சேவைத் திணைக்களத்தினால் முதியோருக்கு வழங்கப்படும் மஞ்சள் நிற விசேட அடையாள அட்டையுடன் தபால் நிலையங்கள் செல்லும் முதியவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் சேவைகளை வழங்குமாறு தபால் மாஅதிபர் சகல தபால் நிலையங்களுக்கும் சுற்று நிருபம் மூலம் அறிவுறுத்தியுள்ளார்.

முதியோருக்கான தேசிய சபை முதியோர் உரிமைகளை பாதுகாப்பதும் பதிப்பதும் என்ற திட்டத்தின்கீழ்பிரதேச செயலக சமூகசேவைத்திணைக்களத்தினால் 65 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மஞ்சள் நிறத்தினாலான அடையாள அட்டைகள் வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

அரச திணைக்களங்கள் தொண்டு ஸ்தாபனங்கள் இவர்களை இனங்கண்டு முன்னுரிமைஅடிப்படையில்சேவை வழங்கப்படல் வேண்டும் என வும்.

தபால் நிலையங்களுக்கு தபால் கட்டளைகளை பெறுதல், முத்திரை, தபால் உறைகள் இளைப்பாற்று சம்பளம் பெறல் போன்ற பல்வேறு தேவைகளுக்காக வரும் முதியோர்கள் மஞ்சள் நிற அடையாள அட்டைவைத்திருப்பின் அவர்களுக்கு சாலம் தாழ்த்தாது முன்னுரிமை அடிப்படையில்சேவைவழங்கவேண்டுமெனவும் அச்சுற்றறிக்கையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (உ-23)

## 12 வயதிற்குட்பட்டோருக்கான உதை பந்தாட்ட சுற்றுப் போட்டி

(சுண்டுக்குளி)

யாழ். வலயப் பாடசாலைகளுக்கு உதை பந்தாட்டச் சங்கமும் இணைந்து நடத்தும் 12 வயதிற்குட்பட்டோருக்கான உதை பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் விளையாடவுள்ள பாடசாலைகளின் விபரம் வருமாறு;

பி. ப. 2. 45 மணிக்கு அச்சுவேலி மத்திய கல்லூரியை எதிர்த்து சிறுப்பிட்டி அ. த. க. பாடசாலையும், பி. ப. 3. 40 மணிக்கு இடைக்காடு மகாவித்தியாலயத்தை எதிர்த்து ஸ்ரீசோமஸ்கந்தா கல்லூரியும், பி. ப. 4. 10 மணிக்கு உரும்பிராய் றோ. க. பாடசாலையை எதிர்த்து புத்தூர்கலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயமும் மோதவுள்ளன. (செ-110)

## வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி உலவிற்குளம் சித்திவிநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பத்துத்தினங்கள் திருவிழா நடைபெற்று எதிர்வரும் 2-ஆம் திகதி இரதோற்சவமும் 3-ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன.

மஹோற்சவ காலங்களில் தினமும் மாலை பிரம்மஸ்ரீ காரை கு. சிவராஜ சர்மாவின் தெய்வீகச் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. (செ)

## பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

நீர்வை மாவிளை அருள்மிகு ஸ்ரீ மீனாட்சிஅம்மன் கோவில் உற்சவ காலத்தில கம்பராமாயணம் எனும் பொருளில் தொடர் சொற்பொழிவு நிகழ்த்திய ஆசிரியர் எஸ். லலீசனைப் பாராட்டும்விழா இன்று மாலை 6 00 மணிக்கு ஆலய மண்டபத்தில் ஆசிரியர் க. தாமராஜா தலைமையில் இடம்பெறவுள்ளது.

அத்துடன், சமய அறிவுப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில் வழங்கலும் இடம்பெறவுள்ளது. (உ-49)

## இன்று மெய்வல்லுநர் போட்டி

[அச்சுவேலி]

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் 2001 ஆம் ஆண்டுக்கான வருடாந்த இல்லமெய்வல்லுநர்போட்டி இன்று பிற்பகல் 1. 00 மணிக்கு கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை மைதானத்தில்நடைபெறவுள்ளது.

கல்விக் கல்லூரி பீடாதிபதி கலாநிதி திருமாவுக்கரசு கமலநாதன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில, பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வி. கே. சிவாஜிலிங்கமும் சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் பிரதேச சபைத்தலைவர் கே. மணி பல்லவராஜன் மற்றும் கோப்பாய் பிரதேச சபைத் தலைவர் பி. குணசிங்கம் ஆகியோரும் கௌரவ விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை அதிபர் எம். பரமசோதியும் கலந்து கொள்ளவுள்ளனர். [உ-14]

## வீதியால் செல்வோர் சிரமம்

(தென்மராட்சி)

கோப்பாய்- கைதடி வீதியிலுள்ள இரு பாரிய கிடங்குகள் இன்னமும் நிரப்பப்படாமல் இருப்பதால் இவ் வீதியால் பயணம் செய்யும் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

இவ் வீதியில் காணப்பட்ட நான்கு கிடங்குகளில் இரு கிடங்குகள் ஏற்கனவே நிரப்பப்பட்டுவிட்டதாகத் தெரிய வருகிறது. (உ-77)

## மாதாந்தக் கூட்டம்

[தென்மராட்சி]

வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் மாதாந்தக் கூட்டம் எதிர் வரும் 28 ஆம் திகதி கொட்டடியிலுள்ளச் சங்கச் செயலகத்தில் தலைவர் எஸ் கதிர்காமத்தம்பி தலைமையில் நடைபெறவுள்ளது. (உ-77)

## தீர்த்தத் திருவிழா

(புலோலி)

பருத்தித்துறை பசுபதீஸ்வரர் ஆலய அம்மன் தீர்த்தத் திருவிழா இன்று நடைபெறும். (செ-52)

## போயாதின ஆன்மீக நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பகவான் ஸ்ரீ சத்திய சாயிசேவா நிலையத்தின் போயா ஆன்மீக நிகழ்ச்சி தொடரில் எதிர்வரும் 3 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் ஓம்காரம், காயத்திரி ஜெபம், இலட்ச அர்ச்சனை, பஜனை, பண்ணிசை, சிறப்புச் சொற்பொழிவு மற்றும் நாராயண சேவை என்பன இடம்பெறவுள்ளன. (உ)

## செயல்முறைப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்டக்கூட்டுறவுசபை நடத்திவரும் பெண்பத்திரிகையாளர்களுக்கான பயிற்சி நெறியில் கலந்துகொள்ளும் பயிற்சியாளர்கள் இன்று நடைபெறவுள்ள, யாழ் மாநகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு செயல்முறைப் பயிற்சி பெறவுள்ளார்கள்.

## இராசி பலன்

24/ 7/ 2001

(ஆடி 8, செவ்வாய்)

சதுர்த்தி பி. ப 4. 32 வரை

பூரம் மாலை 6. 33 வரை

ராகு காலம் 3. 02- 4. 32

நல்ல நேரம்- 10. 32- 12. 02

சித்த- மிர்தம்- ஆடிப்பூரம்

நாக சதுர்த்தி விரதம்

**மேடம்**
முயற்சி தாமதம், மதிப்புக் குறைவு, களத்திரசுகம், உடல் சோர்வு.

**இடபம்**
உறவினர் மனஸ் தாபம், தாயவழிஉறவு, மனச்சஞ்சலம், காரியம் கைகூடும்.

**மிதுனம்**
வாக்கு மேன் மை, தனவரவு, நினைத்த காரியம் கைகூடும், அனுகூலமான சந்திப்பு.

**கடகம்**
மாதர் நட்பு, பொருள் விரயம், வீண் விவாதம், முயற்சி தாமதம்.

**சிங்கம்**
கற்பனை மிகுதி, நண்பர்கள் உதவி, தொழில் முயற்சி, ஆரோக்கியம்.

**கன்னி**
உணர்ச்சி வசப்படல், அரசநன்மை, காரிய தாமதம், நித்திரைக் குறைவு.

**துலாம்**
முயற்சி கைகூடும், தனலாபம், கௌரவம், தொழில் நன்மை.

**விருச்சிகம்**
தொழில்வெற்றி, மேன்மை, நல்ல செய்தி, சுபநிகழ்வு.

**தனுசு**
அரசியார் மனஸ்தாபம், உடல் வியாதி, வீண்பயம், புதியதிட்டம்,

**மகரம்**
எதிர்பாராதபிரச்சினை, கடன் தொல்லை, காரியதடங்கல, வியாதி.

**கும்பம்**
உல்லாசம், அபூர்வசந்திப்பு, தனவரவு, காரியம்கைகூடும்.

**மீனம்**
புதிய முயற்சி, காரிய அனுகூலம், பிரயாணம், நல்ல செய்தி.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

-வளவன்

## கட்டடத் தொழிலாளர் சம்பளம் உயர்த்த அமைச்சர் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் வேலை செய்யும் கட்டடத் தொழிலாளர்களின் சம்பளம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக வடமாகாண கட்டடத் தொழிலாளர் பங்கு கொண்ட கருத்தரங்கில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அத்துடன், கட்டடத் தொழிலாளர்கள் வேலை நேரம் 8 மணித்தியாலம் என்ற வரையறைக்குப் புறம்பான நடைமுறைகளை காணப்படின் தனது கவனத்திற்கு அதனைக் கொண்டுவர வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (உ

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

ஜூலைமாதம் 22 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி வெளிமாவட்டங்களுக்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச ரீதியாகத் தரப்படுகின்றன;

**சங்கானை**

| | |
|---|---|
| 178637 ஏ | 182789 ஏ |
| 183057 ஏ | 188730 ஏ |
| 190672 ஏ | 192382 ஏ |
| 192381 பி | 192381 சி |
| 193521 ஏ | 193578 ஏ |
| 193579 பி | 193579 சி |
| 194207 ஏ | 194390 ஏ |
| 194420 ஏ | 194420 பி |
| 194420 சி | 194439 ஏ |
| 194439 பி | 194486 ஏ |
| 194853 ஏ | 194853 பி |
| 194853 சி | 194918 ஏ |
| 194965 ஏ | 194975 ஏ |
| 194975 பி | 195010 ஏ |
| 195044 ஏ | 195053 ஏ |
| 195052 பி | 195068 ஏ |
| 195079 ஏ | 195093 ஏ |
| 195106 ஏ | 195144 ஏ |
| 195900 ஏ | 195960 பி |
| 195903 ஏ | 195908 ஏ |

**சாவகச்சேரி**

195761 ஏ

**கோப்பாய்**

| | |
|---|---|
| 177426 ஏ | 177426 பி |
| 177426 சி | 180865 ஏ |
| 186368 ஏ | 195671 ஏ |
| 195671 பி | 195671 சி |
| 195672 ஏ | 199016 ஏ |
| 199087 ஏ | 200338 ஏ |
| 200338 பி | 200338 சி |
| 200338 டி | 200383 ஏ |
| 200383 சி | 200383 பி |
| 200383 டி | 200395 ஏ |
| 200395 பி | 200432 ஏ |
| 200434 பி | 200438 ஏ |
| 200443 ஏ | 200443 பி |
| 200443 சி | 201302 ஏ |
| 201302 பி | 201302 சி |
| 201384 ஏ | 201384 பி |
| 201440 ஏ | 201447 ஏ |
| 203253 ஏ | 203292 ஏ |
| 203292 பி | 203292 சி |
| 203300 ஏ | 203316 ஏ |
| 203316 பி | 203333 ஏ |
| 203333 பி | 204510 ஏ |
| 204510 பி | 204514 ஏ |
| 204514 பி | |

**நல்லூர்**

| | |
|---|---|
| 124307 ஏ | 187691 ஏ |
| 187709 ஏ | 187738 ஏ |
| 188036 ஏ | 199716 ஏ |
| 201219 ஏ | 201223 ஏ |
| 201223 பி | 201223 சி |
| 201229 ஏ | 201232 ஏ |
| 201232 பி | 201232 சி |
| 201236 ஏ | 201239 பி |
| 201240 ஏ | 201240 பி |
| 201241 ஏ | 201241 பி |
| 201241 சி | 201243 ஏ |
| 201246 ஏ | 201246 பி |
| 201246 சி | 201246 டி |
| 201248 ஏ | 201250 ஏ |
| 201250 பி | 201250 சி |
| 201257 ஏ | 201268 ஏ |
| 201268 பி | 201345 ஏ |
| 201345 பி | 201389 ஏ |
| 201389 பி | 201389 சி |
| 204086 ஏ | 188786 ஏ |
| 191972 ஏ | 191972 பி |
| 192402 ஏ | 193585 ஏ |
| 193782 ஏ | 193782 பி |
| 194297 ஏ | 194319 ஏ |
| 194361 ஏ | 194952 ஏ |
| 194989 ஏ | 194990 ஏ |
| 194992 ஏ | 195018 ஏ |
| 195114 ஏ | 195844 ஏ |
| 195844 பி | 195844 சி |
| 195844 டி | 195844 ஈ |
| 195845 ஏ | 195857 ஏ |
| 195870 ஏ | 195889 ஏ |
| 197197 ஏ | |

**சண்டிலிப்பாய்**

| | |
|---|---|
| 190573 ஏ | 191826 ஏ |
| 191826 பி | 191826 சி |
| 191863 ஏ | 191879 ஏ |
| 191903 ஏ | 191915 ஏ |
| 191915 பி | 191944 ஏ |
| 192347 ஏ | 193520 ஏ |
| 193543 ஏ | 193544 ஏ |
| 193544 பி | 193551 ஏ |
| 193551 பி | 193721 ஏ |
| 194192 ஏ | 194209 ஏ |
| 194209 பி | 194209 சி |
| 194253 ஏ | |

(தொடரும்)

## நேற்று மீண்டும் பல்கலைக்கழகம் திறப்பு

# வகுப்பு புறக்கணிப்பை தற்காலிகமாக கைவிடுவதென மாணவர்கள் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் கடந்த 4 ஆம் திகதி முதல் மேற்கொண்டு வந்த வகுப்புப்புறக்கணிப்பை தற்காலிகமாக கைவிடுவதென முடிவு செய்துள்ளனர்

நேற்றைய தினம் யாழ். பல்கலைக்கழக அனைத்துப் பீட மாணவர்களுக்குமான விசேட கலந்துரையாடல் ஒன்று கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற போது.

கடந்த 2 ஆம் திகதி படையினரால் கைது செய்யப்பட்ட யாழ் பல்கலைக்கழக விஞ்ஞானபீட இறுதியாண்டு மாணவன் கிருஷ்ணசாமி திவ்வியன் இம்மாதம 17 ஆம திகதி நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட போதும், விடுதலை செய்ய சட்டமா அதிபரின் பணிப்புரை கிடைக்கும் வரை தமது வகுப்புப் புறக்கணிப்பினைக் தற்காலிகமாக கைவிடுவதென தெரிவித்தனர்.

இதேவேளை, மாணவர்களின் வகுப்புப்புறக் கணிப்பையடுத்து கடந்த 10 ஆம் திகதி மூடப்பட்ட யாழ். பல்கலைக்கழகம் நேற்று முதல் மீண்டும் திறக்கப்பட்டதையடுத்து அனைத்துப் பீட மாணவர்களும் பல்கலைக்கழகத்துக்குச் சமுகமளித்தபோதிலும்,

விரிவுரைகள் எவையும் இடம்பெறவில்லை எனத் தெரியவந்துள்ளது (உ-6)

## சமாதானத்திற்காகக் குரல்கொடுப்பது எமது கடமையல்ல

# வரையறைகளை மீறிச் செயற்பட்டால் அடுத்த கணமே வெளியேற்றப்படுவோம்

## கொள்கை பரப்புக் கூட்டத்தில் ச. செ. ச அதிகாரி தெரிவிப்பு

[யாழ்ப்பாணம்]

யுத்தம் நடந்து கொண்டிருக்கும் இந் நாட்டில் சமாதானம் ஏற்பட வேண்டும் எனக் குரல் கொடுப்பதோ, அல்லது பெரும் சேதங்களை விளைவிக்கும் இக் கொடிய போரை நிறுத்த வேண்டும் என்று உரியவர்களுக்கு அழுத்தம் கொடுப்பதோ எமது கடமைகளுக்கு அப்பால் பட்ட விடயம.

ஆயுத மோதல்களினால் காயமடைந்த, மற்றுமபாதிப் படைந்தவர்களைப் பாதுகாப்பதற்கும். அவர்களின் தேவைகளை நிறைவு செய்வதற்காகவுமே நாம் இங்கு வந்துள்ளோம் எமது மேற்படி வரையறையை மீறிச் செயற்பட்டால் அடுத்த கணமே இங்கிருந்து நாம் அனுப்பப்படுவோம்என்பதை மக்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு கடந்த சனியன்று இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க ஹென்றிடுனாட் மண்டபத்தில் நடைபெற்ற சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் கொள்கைபரப்புக்கலந்துரையாடலில் செஞ்சிலுவை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பத்திரிகையாளர்கள் மற்றும் செய்தி ஆசிரியர்களுக்கான மேற்படி கலந்துரையாடலில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் செயற்பாடுகள் குறித்து மேலும் அவர் விளக்கிக்கூறியதாவது;

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் செயற்பாடுகள் யாவும் ஜெனிவா உடன்படிக்கையின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த உடன்படிக்கையின் படி போரினால் பாதிப்படைந்த மக்கள் மற்றும் போரினால் பாதிப்படைந்து தொடர்ந்து போரிடமுடியாத படையினர், போராளிகள் ஆகியவர்களைப் பாதுகாப்பதுடன். சிறைகளில உள்ளவர்களின் நலன்பேணல், பிரிந்த குடும்பங்களை இணைத்தல, சுகாதார நிலையங்கள, வைத்திய சாலைகள் இல்லாதவிடத்தில் அடிப்படைச் சுகாதாரவசதிகளைப் பேணல், அத்தியாவசிய தேவைகளைப் பெற்றுக் கொடுத்தல் அவசரமான செய்திகளைப் பரிமாறுதல், காணாமல் போனவர்கள் தொடர்பான விபரங்களைச் சேகரித்தல், போன்ற மனிதாபிமானப் பணிகளை மேற்கொள்வதற்காகவே நாம் இங்கு வந்துள்ளோம்:

இத்தகைய செயற்பாடுகளை நடு நிலையுடன் மேற்கொள்ளவும் பாரபட்சமற்ற விதத்தில் அவற்றை முன்னெடுப்பதற்குமே எமக்கு அதிகாரம் உள்ளது.

இதன் அடிப்படையிலேயே இலங்கை அரசாங்கத்துடன் நாம் ஒப்பந்தம் செய்துள்ளோம: இதனை மீறி இங்கு சமாதானம் வேண்டி அழுத்தம் கொடுப்பதற்கோ அல்லது போரை நிறுத்த வேண்டும் என வேண்டுகோள் விடுப்பதற்கோ எமக்கு அதிகாரம் இல்லை.

1977இற்குப்பின்னர் ஐ சி. ஆர். சி எடுத்த சில சேவை விஸ்தரிப்பு தீர்மானங்களைக் கூட இலங்கைஅரசு இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை. இந் நிலையில் சில வரையறைகளுக்குட்பட்டே நாம் சேவையாற்றி வருகிறோம் இதனை மக்கள் தெளிவாகப்புரிந்து கொள்ளவேண்டும். இங்கு சமாதானம் ஏற்பட நாம் பாடுபடவில்லை என அவர்கள் கருதுவது எமக்குப் புரிகிறது. எமது சேவைகள் தொடர்பாகவும் அவர்களுக்கு தெளிவான சிந்தனை வேண்டும்.

## ச.ச. நிலையம் புனரமைப்பு

(புலோலி)

பொலிகண்டி மக்கள் படிப்பகமும் சனசமூக நிலையமும் சுமார் 50 ஆயிரம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது.

பன்முகப்படுத்தப் பட்ட வரவு செலவுத் திட்டத்திலிருந்து இந்நிதி ஒதுக்கீடு செய்து வழங்கப்பட்டுள்ளது.

உ-52,

## பகிடிவதை மேற்கொள்வதில்லை

# பல்கலை மாணவர்கள் சத்தியப்பிரமாணம்

(யாழ்ப்பாணம்)

பகிடிவதை மேற்கொள்வதில்லை என நேற்றைய தினம் யாழ். பல்கலைக்கழக அனைத்துப் பீட மாணவர்களும் ஒன்றிணைந்து சத்தியப் பிரமாணம் செய்தனர்.

கடந்த 10 ஆம் திகதி மூடப்பட்ட யாழ் பல்கலைக் கழகம் நேற்று திறக்கப்பட்டதையடுத்து அனைத்துப்பீட மாணவர்களுக்குமான கலந்துரையாடல் ஒன்று கைலாசபதி கலையரங்கில் காலை 9.30 மணிக்கு இடம்பெற்றது.

அவ்வேளை, ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைவாக பகிடிவதை மற்றும் மதுபாவனை போன்ற தீய நடவடிக்கைகளில் இனிமேல் பல்கலைக்கழக மாணவர்கள் ஈடுபடுவதில்லை எனவும்,

இது விடயத்தில் அனைத்து மாணவர்களும் சமூக முன்னோடிகளாக திகழ்வது எனவும் அனைவரும் எழுந்து நின்று ஒருமித்த குரலில் சத்தியப் பிரமாணம் செய்தனர்.

(உ-6)

## ஆயிரத்து 200 மாணவர்களுக்கு சத்துணவு

(கோப்பாய்)

கோப்பாய்க் கல்விக்கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 1 இல் கல்வி பயிலும் ஆயிரத்து 200 மாணவர்களுக்கு இலவசச் சத்துணவை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆரம்பத்தில் வறுமைக் கோட்டின்கீழுள்ள தரம் 1 தொடக்கம்-11 வரையான இதே எண்ணிக்கை மாணவர்களுக்கு வழங்குவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது. (உ-79)

## வேட்டைத் திருவிழா

(கல்வியங்காடு)

கல்வியங்காடு இலங்கை நாயகிமனோன்மணிதேவஸ்தான வேட்டைத் திருவிழா கடந்த சனிக்கிழமை பக்தி பூர்வமாக இடம் பெற்றது.

## பசுவதையை தடுக்கும் பிரசுரம்

[ஈச்சமோட்டை]

பசுவதையில் ஈடுபட வேண்டாம் எனக் கோரும் பிரசுரம் ஒன்றை வட்டுக்கோட்டை தொக்கணப்பாய்கண்ணகாம்பிக சமேத கண்ணகலிங்கேஸ்வர ஆலய பரிபாலன சபையினரும் தொண்டர் சபையினரும் இணைந்து வெளியிட்டுள்ளனர். (உ-59)

## நிதி வழங்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை தென்மராட்சி கிறிஸ்தவ சபைகளின் ஒன்றியம் அண்மையில்சந்தித்து விரிவான கலந்துரையாடலை நடத்தியது.

இச் சந்திப்பில் யுத்தத்தினால் அழிந்த நிலையிலுள்ள தேவாலயங்களின் புனரமைப்பிற்கு நிதிவழங்கு மாறும், தென்மராட்சிப் பகுதியில் வாழ்ந்த மக்களை மீளக்குடியமர்த்தி அப்பகுதிகளின் அபிவிருத்தி பணிகள் தொடர வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கப்பட்டது. (உ)

## கிருஷ்ண ஜயந்தி

(யாழ்ப்பாணம்)

யாழ் பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் எதிர் வரும் மாதம் 12 ஆம் திகதி மாலை 3 30 மணி தொடக்கம் கிருஷ்ண ஜயந்தி விழா கொண்டாடப்படவுள்ளது.

அன்று ''கிருஷ்ணகானம்'' பஜனையைத் தொடர்ந்து ஸ்ரீ. எம். சிவலோகநாதன் ''கண்ணன் காட்டியவழி'' என்னும் பொருள் பற்றி சொற் பொழிவாற்றுவார். (உ)

## தேசிய மட்டத்தில் சதுரங்கப் போட்டி தெரிவானோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

அடுத்த மாதம் கண்டியில் நடைபெற உள்ள தேசிய மட்டச் சதுரங்கப் போட்டிக்கான யாழ் மாவட்டமட்டத் தெரிவுப் போட்டிகள் கடந்த 7,8.14 ஆம் திகதிகளில் யாழ் இந்து ஆரம்ப பாடசாலையில் நடைபெற்றன;

12 பிரிவுகளாக நடைபெற்ற மேற்படி போட்டியில் 240 பேர் கலந்து கொண்டனர். தேசிய மட்டப்போட்டிகளுக்காக 22 பேர் தெரிவு செய்யப் பட்டுள்ளனர்.

தெரிவானோர் விபரம் வருமாறு:-

**10 வயதுக்கு கீழ்-பெண்கள் பிரிவு**

★ சிவராஜா திவ்ஜா

**12 வயதுக்குக்கீழ் பெண்கள் பிரிவு**

★ ராமச்சந்திரா கௌசா
★ சிவகுமாரன் லக்சியா

**14 வயதுக்கு கீழ் -பெண்கள் பிரிவு:**

★ சிவானந்தன் றாதிகா
★ ஆனந்தசிங்கம் அனுசியா

**16 வயதுக்கு கீழ்- பெண்கள் பிரிவு:-**

★ நிவேதிகா பேரின்பநாயகம்
★ நிதிமப்பிரியா தர்மலிங்கம்

**18 வயதுக்கு கீழ் பெண்கள் பிரிவு:-**

★ தர்சினி வைரமுத்து
★ வாலநிதி முருகையா

**20 வயதுக்கு கீழ் பெண்கள் பிரிவு:**

★ சிவபாதரத்தினம் சிவப்பிரியா
★ ஆர். மோசன சுதாஜினி

**10 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு:**

★ தயாளன் விவியன்
★ சிவராஜா சிறிலக்ஷ்மன்

**12 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு:**

★ சிவானந்தமூர்த்தி சறேன்
★ ஜேகநாதன் திவாகர்

**14 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு:**

★ எஸ். ஜேகநாதன்
★ ஜி அமரரேஸ்

**16 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு:**

★ எஸ். சிறிக்காந்தன்
★ எஸ் சிறிகோகுலன்

**18 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு:**

★ ஜ நிவேதன்

**20 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு:**

★ ஜி ஆதித்தன்
★ வ. ஐங்கரன்

மேற்படி தெரிவுப் போட்டி யாழ். சதுரங்க சம்மேளனத்தினாலும் இலங்கை சதுரங்க சம்மேளனத்தினாலும் இணைந்து நடாத்தப்பட்டது.

இப் போட்டியை ஒழுங்கு செய்வதற்காக இலங்கை சதுரங்க சம்மேளனத்தைச் சேர்ந்த டெறிக் பெரேரா எஸ் பி. சமகே. ரி. யு. எஸ். பெர்னாண்டோ, விரவன்ச ஆகியோர் யாழ்ப்பாணம் வந்திருந்தமை தெரிந்ததே. உ-0

## நாகபூஷணி அருள்தாராய்

ஆடி வரும்பூரம் அபிஷேகப் புனலாடி,
கோடி உடுத்து அணிக் குவைசூடிக் கொலுவிருந்து,
நாடி வருமடியார் நாகம்மை கன்னியெனச்
சூடி உனைவாழ்த்தச் சுடர்பவளே அருள்தாராய்!

எங்கும் மலர்த்தலினால் எவ்வுயிர்க்கும் தாயாகித்
தங்கும் பொலிவதனைத் தந்தூட்டித் தண்ணளியை
பொங்க வைத்துலகைப் புலரவைத்தும் பூரித்தும்
மங்கை எனஇன்றும் நிற்பவளே அருள்தாராய்!

காதலால் உந்தன்பாற் கசிந்துருகிக் கைகள் ஏந்து
போதலால் புறம்பாகப் பூசனைகள் செய்தேற்குப்
பேசமாய் நிற்காமல் பிரியமுடன் கைகொடுத்தும்
ஏதமிலாக் கன்னியென இருப்பவளே அருள்தாராய்

மக்கட் பேறில்லார் மழலைகளைப் பெற்றிடவும்
மிக்கப் பேர்புகழால் மிளிர்வதற்கு அருள்சுரந்தும்
பத்திப் பேர்பற்றாப் பக்குவத்தால் மங்கையெனச்
சித்திசேர் சிவைநாக பூஷணியே அருள்தாராய்

நயினைக் கவிஞர் நாகசண்முகநாத பிள்ளை

# செய்தித் துளிகள்

## விபரம் சேகரிப்பு

[மந்திகை]

விடத்தற்பளை கமலாசினி வித்தியாலயத்தில் க. பொ. த. சாதாரண பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் விபரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

அதேவேளை 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களும் தமது வரவை உறுதிப்படுத்துமாறு அதிபர் கு கதிர்காம சேகரம் தெரிவித்துள்ளார். (உ-23)

## வருடாந்த மஹோற்சவம்

(புலோலி)

கரணவாய் மூத்த விநாயகராலய வருடாந்த மஹோற்சவம் நாளை புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 2ம் திகதி தேர்த் திருவிழாவும், 3 ம திகதி தீர்த்த திருவிழாவும் நடைபெறவுள்ளன. (செ-52)

## கராத்தே பயிற்சிப் பாசறை

(ஈச்சமோட்டை)

சோட்டோகான்கராத்தே அக்கடமியினராலகராத் தேயின் புதியநுட்பங்கள், வடிவமைப்புக்கள் பற்றியபயிற்சிப் பாசறை ஒன்று நேற்று முன்தினம் காலை 8.00 மணிமுதல 12.00 மணி வரை இடம்பெற்றது. சோட்டோக்கான்கராத்தே அக்கடமியின் இயக்குநர் அன்ரோடிவேஸ் (3 வது கறுப்புபட்டி) நேரடி வழிநடத்தலில் இப் பயிற்சிப் பாசறை நடைபெற்றது.

இப் பயிற்சிப் பாசறையில் நூற்றுக்கும் அதிகமான கராத்தே மாணவர்கள் கலந்து கொண்டு பயிற்சிகளைப் பெற்றனர்.

இதேபோன்று பயிற்சிப் பாசறைகள் தொடர்ந்து இனி வரும் காலங்களிலும் நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (உ-59)

## முதலுதவிச் சேவை

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 4 ஆம் 5 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ள ஊர்காவற்றுறை சின்னமடு மாதா தேவாலயப் பெருநாளின் போது சென்-ஜோன்ஸ்- அம்புலன்ஸ் படையினர் மாவட்ட ஆணையாளர் எஸ் - செல்வரஞ்சன் தலைமையில் முதலுதவிப் பணியாற்றவுள்ளதாக படை நிர்வாக உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடலில் இது பற்றிய முடிவு எடுக்கப்பட்டது. (உ-104)

## சாட்சிகளுக்கு ஈ. பி. டி. பி பாதுகாப்பு

(புலோலி)

தென்மராட்சி அல்லாரை பாலியல் வல்லுறவு சம்பந்தமாக சந்தேகநபர்களை அடையாளம் காட்டவுள்ள இளைஞரும், மிருசுவில் படுகொலைச் சாட்சியான இளைஞரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினரின் பாதுகாப்பில் தொடர்ந்தும் வைக்கப்பட்டுள்ளனர்.

மிருசுவில் படுகொலை சந்தேகநபர்களான 14 இராணுவத்தினரும் விமானமூலம் அனுராதபுரத்திற்கு மாற்றப்பட்டுள்ளனர் இச் சந்தேகநபர்கள் 14 பேரும் எதிர்வரும் 1ம் திகதி அநுராதபுரம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ளனர் (உ-52)

## ஆலயம் புனரமைப்பு

(புலோலி)

பருத்தித்துறை பிரதேச சபைப்பகுதியில் உள்ள உபய கதிர்காமம் பிரயாணிகளின் நன்மைகருதி சுமார் 1 இலட்சம் ரூபா செலவில் திருத்தி புனரமைக்கப்படவுள்ளது.

பொதுமக்களின்கோரிக்கைகளையடுத்து பருத்தித்துறை பிரதேசசபைத் தலைவர் ஐ ஸ்ரீரங்கேஸ்வரனின் முயற்சியினால் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலிருந்து இதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (க-52)

## நிர்வாகசபை தெரிவு

(மந்திகை)

பருத்தித்துறை போரூட் நிறுவன அனுசரணையுடன் இயங்கும் தம்பசிட்டி வெளிவாரி பட்டப்படிப்பு அலகின் ஆண்டுப் பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும் அண்மையில் நிலைய மண்டபத்தில் ந. இராசலிங்கம் தலைமையில் நடைபெற்றது

இவ்வருடத்திற்கான நிர்வாக சபைத் தலைவராக என். சிவானந்தன், செயலாளராக ரி சாந்தினி, பொருளாளராக எம். தயாபரன், உப தலைவராக கே. தயாளினி, உப செயலாளராக என். சஜி ஆகியோரும்,

எஸ். நரேந்திரன், ரி: தயாபரன், எஸ். உதயதர்சினி, வை ஜெயப்பிரியா, கே சஜிநா வி. சுதர்சினி, எம் குணசுந்தர், எஸ். சிவாயநம ஆகியோர் செயற்குழு உறுப்பினராவும் தெரிவு செய்யப்பட்டனர். (உ-23)

## தேரர்கள் கண்டனம்

(கொழும்பு)

கடந்த 19 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியின்போது அரசு நடந்து கொண்ட முறை பற்றி மல்வத்த பீடாதிபதி, நம்புக்கண விலகப்சி தேரரும், அஸ்கிரிய பீடாதிபதியும் தமது கண்டனத்தை அமைச்சர் அலவி மௌலானாவிடம் தெரிவித்துள்ளனர்.

அமைச்சர் அலவி மௌலானா நேற்று முன்தினம் அஸ்கிரிய, மல்வத்த பீடாதிபதிகளை சந்தித்துள்ளார்.

ஜனநாயக வழியில் இடம்பெற்ற போராட்டத்தை நசுக்குவதற்கு ஜனநாயக விரோத அடக்குமுறையை பயன்படுத்தியமை தவறு என்று மல்வத்த பீடாதிபதி சுட்டிக்காட்டியதுடன் கண்டனத்தையும் தெரிவித்துள்ளார். (வ)

## ஏழாலையில் களவு

(ஏழாலை)

கடந்த ஞாயிற்றுஇரவு ஏழாலைப்பகுதியிலுள்ள வீடு ஒன்றில் இரு மின் மோட்டார்கள் களவாடப்பட்டுள்ளன.

ஏழாலை மேற்கைச்சேர்ந்த போ. கணேஸ்வரலிங்கம் என்பவரது வீட்டிலிருந்தே மேற்படி மோட்டார்கள் களவாடப்பட்டுள்ளன. (உ-12)

## பாண் தரமில்லை

(ஈச்சமோட்டை)

சங்கானை, வட்டுக்கோட்டைப் பகுதியில் விற்பனையாகும் பாண் தரம் மிகக் குறைவாக இருப்பதாக அப்பகுதி மக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

பாணின் அளவு சுவை என்பன மிகக் குன்றியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-59)

# யுத்தப்பிரதேச மக்களுக்கு உதவ

# விசேட சட்டநலன்புரி நிலையங்கள்

## அகதி முகாம்களுக்கு அருகில் அமையும்

(கொழும்பு)

யுத்தப்பிரதேசத்தில் மக்களுக்கான விசேட சட்ட நலன்புரி இயக்கம் ஒன்றை சட்டத்தரணிகள் சங்கத்தின் சட்ட உதவி ஆணையகம் தொடங்கியுள்ளது

யுத்தச்சூழ்நிலயினால் தூண்டப்படும் பாலியல் வல்லுறவுக் குற்றச்சாட்டுக்கள் உட்பட குற்றவியல் துன்புறுத்தல்களுக்கு உட்படும் மக்களுக்கு உதவும் நோக்குடன் இது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வடக்கு- கிழக்கிலிருந்து சுமார் 200 சட்டத்தரணிகள் இதில் பணியாற்றதாமாகவே முன்வந்துள்ளனர் என்று சட்ட உதவி ஆணையகத்தின தலைவர் எஸ் எஸ் விஜயரத்ன தெரிவித்தார்.

முதலில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு. வவுனியா. புத்தளம் ஆகிய இடங்களிலுள்ள அகதிமுகாம்களுக்கு சமீபமாக சட்ட உதவி நிலையங்கள் அமைக்கப்படும்.

இது தொடர்பாக பாதிக்கப்பட்டவர்கள் தேவையான விசாரணைகளை மேற்கொள்வதற்கு வசதியாக கொழும்பில் ஒரு உடன்தொலைபேசி இம்மாத இறுதியில் பொருததப்பட்டு அதன் இலக்கம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படும் எனத்தெரிய வந்துள்ளது. (உ)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

சந்தை ரோடை சுன்னாகம் வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் நாளை ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறவுள்ளது (து)

## விளையாட்டு விழா

(மந்திகை)

வதிரி தமிழ் மன்ற அனுசரணையுடன் இயங்கும் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா கடந்த ஞாயிறன்று பாலர்பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.

தமிழ் மன்றத்தின் தலைவர் க கௌரிதாசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை செயலாளர் சி. பசுபதி பிரதமவிருந்தினராகவும் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் வெ சுப்பிரமணியம், ஆரம்பப்பிள்ளை பருவ அபிவிருத்தி உதவி கல்விப்பணிப்பாளர் துரை சத்தியசீலன் ஆகியோர்சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர். (உ-23)

## அவசர கலந்துரையாடல்

(வண்ணார்பண்ணை)

க. பொ. த உயர்தர புள்ளிகளின் அடிப்படையில் ஆசிரியர் நேர்முகப்பரீட்சைக்கு தோற்றி இன்று வரை நியமனம் கிடைக்காதவர்களுக்கான அவசரகலந்துரையடல நாளை புதன்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரியகுளம் சந்தியிலுள்ள புதியஉயர் கல்லூரியில் நடைபெறவுள்ளது (உ-109)

## ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

(மந்திகை)

வடமராட்சி வடக்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நாளை மு. ப. 10.00 மணிக்குசெயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது

இந்நிகழ்வில் பிரதேச அபிவிருத்தியில ஈடுபடும் அரச, அரசசார்பற்ற நிணைக்களங்களின் பிரதிநிதிகளையும் கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி அறிவித்துள்ளார். [உ-23]

## பொதுக் கூட்டம்

(புலோலி)

அல்வாய் கிழக்கு ஞானவைரவர் ஐக்கிய நாணயசங்க 46 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் அல்வாய் சுப்பிரமணிய வித்தியாலயத்தில் நடைபெற்றது.

தலைவராக ஞ ஞானச்சந்திரனும் உப- தலைவராக கே. தங்கவடிவேலும் செயலாளராக திருமதிஏ சற்குணராணியும் பொருளாளராக கே கோபாலரத்தினமும் தெரிவு செய்யப்பட்டனர்.

15 பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது. (உ-52)

## பிரிட்டன் கத்தோலிக்க தேவாலய பண்டிகையில் தமிழர் குழுக்கள் மோதல்

(கொழும்பு)

பிரிட்டனிலுள்ள வல்சிங்கம் என்னுமிடத்தில் அண்மையில் நடைபெற்ற கத்தோலிக்க தேவாலயப் பண்டிகையொன்றில் பார்வையாளர்களாகக்கலந்து கொண்ட இலங்கை மற்றும் தென்னிந்தியத் தமிழர்கள் இரு கோஷ்டிகளாகப்பிரிந்து மோதிக்கொண்டதில் ஐவர் கடுங்காயங்களுக்குள்ளாயினர்

கத்திக்குத்துக்காயங்களுடன் சதீஸ்குமார் என்ற இளைஞர் குயின் எலிசபெத் வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறார்.

இது தொடர்பாக ஐந்து தமிழர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு விசாரிக்கப்படுகின்றனர் இந்நிகழ்வில் சுமார் 5 ஆயிரம் வரையான தமிழர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (உ)

## மீன்பிடியியல் டிப்ளோமா கற்கைநெறிக்கு தெரிவு பரீட்சை 30 ஆம் திகதி

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக மீன்பிடியியல் டிப்ளோமா கற்கைநெறி மாணவர்களுக்கான தெரிவுப்பரீட்சை இம்மாதம் 30 ஆம் திகதி மு ப 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது

முன்னதாக இம்மாதம் 23 ஆம் திகதி இப்பரீட்சை நடத்தத் திட்டமிட்டிருந்த போதிலும் பல்கலைக்கழகம் மூடப்பட்டமையினால் 30 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-6)

## அல்லாரைச் சம்பவம் இராணுவ அடையாள அணிவகுப்பு நாளை

(மந்திகை)

அல்லாரைப் பகுதியில் பெண்ணொருவர் இராணுவத்தினரால் பாலியல்வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பான அடையாள அணிவகுப்பு நாளை புதன்கிழமை மு.ப 10.00 மணிக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தில் நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி பிரதேச உதவியோகபற்றற்ற நீதவான் சு கந்தசாமி முன்னிலையில் இந்த அணிவகுப்பு நடைபெறுமென நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவிததுள்ளன.

பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக மூன்றுஇராணுவத்தினர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-23)

## கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழிப்பு

[மந்திகை]

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரிபிரிவிலுள்ள கட்டாக்காலி நாய்களை நஞ்சூட்டி அழிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இப்பணி எதிர்வரும் 26 ஆம திகதி துன்னாலை வடக்கு. வல்லிபுரக் குறிச்சி, வல்லிபுர கோவிலடி ஆகிய பகுதிகளில நடைபெறவுள்ளதாக சுகாதாரப் பரிசோதகர் அறிவித்துள்ளார்.

நஞ்சூட்டி அழிப்பதற்கான நடவடிக்கைகள் பருத்தித்துறை பிரதேசசபை, பிரதேச சுகாதார பரிசோதகர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

அன்றையதினம இப்பகுதியிலுள்ள வளர்ப்பு நாய்களை கடடிவைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. [உ-22]

## கோப்பாய் சாயி சிறுவர் இல்லத்திற்கு ஆட்சேர்ப்பு

(யாழ்ப்பாணம்)

வட- பிராந்திய சத்திய சாயிசேவா நிறுவனங்களின் இணைப்புக் குழுவினரால் கோப்பாயில் நடத்தப்படும் சாயி சிறுவர் இல்லத்தில் சிறுவர்களைச் சேர்த்துக்கொள்ள விரும்புவோர் தம்முடன் தொடர்பு கொள்ளும்படி மேற்படி நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

தாய் அல்லது தந்தையரை இழந்த 6 தொடக்கம் 12 வயதிற்குட்பட்ட வறுமைக்கோட்டின் கீழ் வாழும் "ஆண்" பிள்ளைகளை சேர்க்க விரும்புவோர் தொடர்பு கொள்ளும்படியும் நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (உ-104)

### இன்று ஒரு தகவல்

## குப்பையில் கோமேதகம்

அரசன் ஒருவன் சிறைச்சாலையைப் பார்வையிடவந்தான். அங்கிருந்த கைதிகள் ஒவ்வொருவரையும் அழைத்து அவர்கள் சிறைக்கு வந்ததற்கான காரணத்தைக் கேட்டான். முதல் கைதி 'அரசே! நான் எந்தக் குற்றமும் செய்யவில்லை என்னைத் தவறுதலாகச் சிறையில் அடைத்துவிட்டனர். தாங்கள் தான் அருள் கூர்ந்து என்னை விடுவிக்க வேண்டும்' என்று வேண்டினான் அடுத்த கைதி 'அரசே! எனக்கும் நீதிபதிக்கும் தகராறு. அதனால் அவர் எனக்குச் சிறைத் தண்டனை தந்துவிட்டார் நான் எந்தப் பாவமும் அறியாதவன்' என்று கெஞ்சினான்.

இப்படியே எல்லாக் கைதிகளும் தாங்கள் எந்தக் குற்றமும் செய்யாத நல்லவர்கள என்றும், சிறையில் கிடந்து துன்புறுவதாகவும் கூறினார்கள். அரசன் பொறுமையாக எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்தான். கடைசியாக வந்த ஒரு கைதி மட்டும் 'அரசே! இந்தக் கையினால் தான் நான் திருடினேன் அதற்காகச் சிறைத் தண்டனை அனுபவிக்கிறேன்' என்றான் இதைக்கேட்டதும் அரசன் கடுங் கோபம்கொண்டான். சிறைக் காவலர்களைப் பார்த்து, நல்லவர்கள் மட்டும் இருக்கக் கூடிய இந்தச் சிறைக்குள் இத் திருடனை யார் கொண்டுவந்தது? இவன் இங்கிருக்கும் எல்லோரையும் திருடராக்கி விடுவான் இவனை உடனே வெளியே விரட்டி விடுங்கள்!' என்று கத்தினான். அரசனின் குறிப்பையுணர்ந்த காவலர்கள் அவனை விடுதலை செய்தனர்.

பேராசிரியர் எ. ரோஜ்.

### க. பொ. த (உ/த) பரீட்சை

# தென்மராட்சி பாடசாலை மாணவர் தோற்றும் பரீட்சைநிலைய விபரம்

(மந்திகை)

அடுத்தமாதம் நடைபெறவுள்ள க பொ.த(உ/த)பரீட்சைக்குத் தோற்றவுள்ள தென்மராட்சி கல்விவலயப் பாடசாலை மாணவர்கள் தோற்றும் பரீட்சை நிலையங்கள் பற்றிய விபரங்களை சம்பந்தப்பட்ட கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார்.

இதன்படி சாவகச்சேரி இந்துக்கல்லூரி மாணவர்கள் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மண்டப இல. 1,2, இலும்.

சாவகச்சேரிடிறிபேக்கல்லூரி மாணவர்கள்-நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மண்டப இல. 3 இலும்.

சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவர்கள் - கரவெட்டி மகளிர் கல்லூரியிலும்.

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலய மாணவர்கள் கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயத்திலும்,

பளை மத்திய கல்லூரி மாணவர்கள்-புலோலி றோ. க. த. க. பாடசாலையிலும்

வலிகாமம் பகுதியில் இடம் பெயர்ந்து தங்கியுள்ள ஏனைய மாணவர்கள் இணுவில் மத்தியகல்லூரி 3, 4. ஆம் இலக்க மண்டபங்களிலும் பரீட்சைக்குத் தோற்ற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-23)

## வாள் வெட்டுச் சம்பவத்தில் பெண்கள் உட்பட மூவர் காயம்

(மந்திகை)

அயல் வீட்டாருடன் ஏற்பட்ட வாய்த்தகராறு வாள் வெட்டுவரை சென்றதில் இருபெண்கள் உட்பட மூவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த சனியன்று கரவெட்டி இராஜகிராமத்தில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

ஆண்டார் வளவைச் சேர்ந்த சந்திரன் இந்திரன் (வயது45) பாலச்சந்திரன் மாலினி (வயது21) மாணிக்கம் மல்லிகா (வயது42) ஆகிய மூவருமே வெட்டுக்காயங்களுடன் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சம்பவம் தொடர்பாக நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (உ-23)

## வவுனிக்குளத்தை சேர்ந்த கணவன், மனைவி விடுதலை

(வவுனியா)

இராணுவக்கட்டுப்பாடற்ற வவுனிககுளத்தை சேர்ந்த கணவனும்மனைவியும் பிரமணாளங்குளம் சோதனைச் சாவடியில் வைத்து படையினரால் கடந்தவெள்ளிக்கிழமை கைதுசெய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்டவர்களான வங்கவேல் ஜெகன் (வயது23) அவரது மனைவி ஜெகன்லலிதா (வயது21) ஆகியோரில்லலிதாஜெகன் கடந்த சனி விடுதலைசெய்யப்பட்டார்.

இவர்களுடன் மேலும்இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என மனித உரிமை ஆணைக்குழு அதிகாரி தெரிவித்துள்ளார். (5)

## மின்கட்டண நிலுவையை செலுத்தவும்

[யாழ்ப்பாணம்]

மின் நிலுவைப் பணத்தை செலுத்தாதவாடிக்கையாளர் நிலுவைப் பணததை உடன் செலுத்தி முடிக்க வேண்டுமென இலங்கைமின்சார சபையின்யாழ். பகுதி மின்பொறியியலாளர்தெரிவித்துள்ளார்.

மின் கட்டணத்தைச் செலுத்தாதவர்களின்வீட்டிற்கான மின்வழங்கல் உடன் துண்டிக்கப்படும் என்றும் முழு நிலுவைப்பணம் மற்றும் தண்டப்பணம் 500 ரூபாவும் செலுத்த வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவிததுள்ளார். (க)

## தேர்தல் பணிகளில் அதிபர், ஆசிரியர்களை ஈடுபடுத்துவதில்லை திணைக்களம் தீர்மானம்

(கொழும்பு)

சர்வஜன வாக்கெடுப்பு தொடர்பான பணிகளில் அதிபர்சேவை, ஆசிரியர் சேவையிலுள்ளவர்களை ஈடுபடுத்துவதில்லை என தேர்தல் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

சகல உதவித் தேர்தல் ஆணையாளர்களுக்கும் இது தொடர்பான அறிவித்தலை தேர்தல் திணைக்களம் வழங்கியுள்ளது. எனவே அதிபர் ஆசிரியர் சேவையிலுள்ளவர்கள தபால்மூலம் வாக்களிப்புக்கு விண்ணப்பிக்கத்தேவையில்லை என தெரிவிக்கப்படுகிறது. (உ-8)

## சர்வஜன வாக்கெடுப்பு வெற்றி கொள்ளும் உத்திகள் ஆராய்வு

(கொழும்பு)

ஓகஸ்ட் மாதம் 21-ம்திகதி நடைபெறவுள்ள சர்வஜன வாக்கெடுப்பில், அரசுவெற்றி கொள்வது தொடர்பான உத்திகளை நேற்று முன்தினம் இரவு கூடிய அமைச்சரவை விரிவாக ஆராய்ந்துள்ளது.

சர்வஜனவாக்கெடுப்பில் அரசு வெற்றிகொண்டால் சகல அரசியல் கட்சித் தலைவர்களுடனும் சகல மதத் தலைவர்களுடனும்கலந்துரையாடுவதெனறு அமைச்சரவை தீர்மானித்துளது.

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்க தலைமையில் நடைபெற்ற இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் சகல அமைச்சர்களும் கலந்துகொண்டனர்.

அமைச்சரவைக் கூட்டம் இரவு 6 30 மணி முதல் 9 30 மணிவரை நடைபெற்றது. (வ)

## படைவீரர் உடல் சிதறி பலி

(கொழும்பு)

கிளாலி முன்னரங்க நிலைகளிலிருந்து புலிகளின் பகுதிககுள வேவு பார்க்கச் சென்றபடையினர் திடீரென ஏற்பட்ட தொடர் குண்டு வெடிப்புகளில் சிக்கியதாக தெரிவிககப்படுகிறது.

அப்பகுதியில் புலிகளால் புதைத்து வைக்கப்பட்டிருந்த பொறிவெடிகள் வெடித்தபோது படையினர் நிலைகுலைந்து தமது நிலைகளுககு தப்பியோடி வந்ததாகவும பின்னர் படையினர் ஒருவர் காணாமல் போயிருந்ததை அவதானித்த படையினர் மேலதிக இராணுவததுடன் சென்று அப்பகுதியில் தேடுதல் நடத்தியபோது சிதறிய உடலின் பாகங்களை மீட்டுளளதாகவும் தனியார் வானொலி சேவை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (உ-8)

## மட்டக்களப்பில் வீடமைப்பு நிதியுதவி இடைநடுவில் நிறுத்தம்

(கொழும்பு)

மட்டக்களபபு மாவட்டத்தில் அரசின் நிதியுதவியுடன் அமைக்கபபட்டுவந்த வீடுகளுக்கான நிதியுதவிகள் இடைநிறுத்தப்பட்டதால், வீடுகள் பூர்த்தியடையாத நிலையில் மககள் கஷ்டங்களைஎதிர் நோக்குவதாக தெரிவிககப்படுகிறது.

கிழககு அபிவிருத்தி புனர்வாழ்வு, கிராமிய வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சின் ஆரம்பக்கட்ட நிதியுதவியுடன் காத்தான்குடி ஆரையம்பதி, காங்கேசன் ஓடை, பாலமுனை, புதியகாத்தான்குடி ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்டுவந்த 400 வீடுகளுக்கான 2ம் கட்ட நிதியுதவிகளை அந்த அமைச்சு வழங்க பின்னடித்து வருவதால் இந்த நிலைமை தோன்றியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (உ-8)

## அரசுக்கு கடன் வழங்க வேண்டாமென ஐ.தே.க. அழுத்தம்

(கொழும்பு)

அரசாங்கம் பெரும்பான்மையை இழந்துவிட்டதால் அதற்கு கடன் வழங்க வேண்டாம் என்று சர்வதேச நிறுவனங்களைக் கோருவதென்று ஐ தே.க. தீர்மானித்துளளது.

வழங்கப்படும் கடன்களை அரசாங்கம்திருப்பித்தர மாட்டாது எனவும் முதலாவதாக 200 மில்லியன் டொலர்களை கொடுப்பதற்கு பொறுப்பான வங்கிக்கு கடிதம் எழுதுவதாக ஐ. தே. க தீர்மானித்துள்ளது. (உ)

## யாழ். மாநகரசபை தொழிலாளர் குறைகள் விரைவில் நீங்கும்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாநகரசபை சுகாதாரத் தொழிலாளர்களின் வீட்டுப் பிரச்சினையைவெகு விரைவில் தீர்த்து வைப்பதென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை சுகாதாரத் தொழிலாளர்களின் பிரதிநிதிகளைச் சந்தித்த வேளை வீடில்லாப் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில, யாழ். மாவட்டத்தில அமுல்படுத்தப்படவுள்ள ஆயிரம் வீட்டுத் திட்டத்தில் 350 வீடுகளை அவர்களுக்கு வழங்குவதென தெரிவித்தார்.

அத்துடன், சுகாதார. குடிநீர்ப்பிரச்சினகளை நிவர்த்திக்கவும், சுகாதார ஊழியர் தொழிற் சங்கக் காரியாலயத்தை திருத்தவும் உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார்.

இச் சந்திப்பில் யாழ். இராணுவ கட்டளை அதிகாரி நீல் டயஸ் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார் [உ]

## தொண்டர் சேவையில் 400 பேர்

(யாழ்ப்பாணம்)

இம்மாதம 25-ம் திகதி ஆரமபமாகவுளள நலலூர் கந்தன் ஆலய உற்சவததின் போது தொண்டர்சேவையில் ஈடுபடுவதற்காக சுமார் 400க்கும மேறபட்ட தொண்டர்களை கொககுவில் மக்கள நலன்புரிச் சஙகம் சேவையில் ஈடுபடுததவுளளது.

ஆலயததைச் சுற்றி அமைக்கபபடும பததுதடை அரண்களில் ஒன்பது தடை அரண்களில் மேற்படி அமைபபின தொண்டர்கள சேவையில் ஈடுபடுவர். (க-15)

### வடமராட்சி தெற்கு, மேற்கில்

## தனியான கால் நடை வைத்திய அதிகாரி அலுவலகம்

(புலோலி)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலர் பிரிவில் அமைக்கப்பட்ட கால் நடை வைத்திய அதிகாரி அலுவலகம் விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இதற்கான அனுமதியை கால் நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் வழங்கியுளளது.

கால் நடை வைத்திய அதிகாரி ஒருவர் நியமிக்கபபட்டதும் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்கான கால் நடை வைத்திய அதிகாரி அலுவலகம் திறந்து வைக்கபபடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது வடமராட்சி தெற்கு மேற்கு, வடமராட்சி வடக்கு பிரதேச செயலகங்களின் பிரிவுகளுக்கும் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகப் பிரிவுக்கும் ஒரேயொரு கால் நடை வைத்திய அதிகாரி அலுவலகமே பருத்தித்துறையில் இயங்கி வருகின்றதும்,

இதனால் கால்நடை வளர்ப்போர் தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய பல சிரமங்களை எதிர் நோக்கி வருவதும் குறிப்பிடத்தக்கது. (உ-52)

## சித்திரத்தேர் வெளளோட்டம்

(புலோலி)

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய சித்திரத்தேர் வெள்ளோட்டம் நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது. (செ-52)

# சீனச் சுரங்கத்தில் வெடி விபத்து
# 100 இற்கும் அதிகமானோர் பலி
## பலரைக் காணவில்லை

(பீக்கிங்)
சீனாவில் தென் கிழக்கு மாகாணமான ஜெனசுவில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட சுரங்கம் ஒன்றில் ஏற்பட்ட வெடி விபத்தில் 100 இற்கும் மேற்பட்டோர் பலியாகியிருக்கலாம் என அஞ்சப்பட்டு வருகிறது.

இதைவிட, 91 பேர் காணாமல் போயுள்ளனர் இதுவரை 13 சுரங்கத் தொழிலாளர்கள் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர் எனவும் மீட்புப் பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கடந்த இரண்டு மாதங்களின் முன்னர் இச் சுரங்கத்தினை மூடிவிடுமாறு அதிகாரிகள் தெரிவித்திருந்தும் சட்டவிரோதமாக இச் சுரங்கம் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-7)

## ரயிலை பின்னோக்கி செலுத்திய பதினேழு வயது இளைஞன்

(புதுடில்லி)
வட இந்திய வாரணாசி ரயில் நிலையம் ஒன்றில் தரித்து நின்ற ரயில் ஒன்றை 17 வயது இளைஞன் ஒருவர் பின்னோக்கி ஓட்டிச் சென்ற சம்பவம் கடந்த வியாழக்கிழமை, காலை இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தின் போது 14 ரயில் நிலையங்களை இந்த ரயில் கடந்து சென்றுள்ளது.

கங்கை நதியிலிருந்து புனித நீர் எடுத்துச் சென்ற இந்த இளைஞன் நிறுத்தியிருந்த இந்த ரயிலின் இயந்திரப் பகுதியினுள் ஏறி அங்கிருந்த சுவிச்சுகளை அழுத்திய போதே ரயில் பின்னோக்கி நகர ஆரம்பித்து 115 மைல் தூரம் சென்றுள்ளது.

இந்த ரயிலை நிறுத்த ரயில்வே அதிகாரிகள் எடுத்த முயற்சிகள் வெற்றி அளிக்கவில்லை என்றும் ரயிலைத் தடம் புரளச் செய்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவத்தின் போது ரயில்வே ஊழியர் ஒருவர் கொல்லப்பட்டதுடன் ஒருவரின் கைதுண்டிக்கப்பட்டுள்ளது. (க-3)

## காஷ்மீர் மாநிலத்தில்
# இந்துக்கள் 15பேர் சுட்டுக் கொலை

(ஜம்முகாஷ்மீர்)
இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்தில் 15 இந்துக்களை தீவிரவாதிகள் சுட்டுக் கொன்றுள்ளனர்.

காஷ்மீரின் டோரா மாவட்டத்தில் குடியிருந்த 15 இந்துக்கள் வீட்டிலிருந்து வயல் வெளிக்கு பலாத்காரமாக இழுத்துச் செல்லப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

இதே தினத்தன்று, மேலும் 5 இந்துக்கள் கடத்திச் செல்லப்பட்டுவிட்டதலை செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை காஷ்மீர்ப் பகுதியின் முக்கிய புனிதத் தலத்தில் ஒன்றான அமர்நாத் குகைக் கோயிலுக்கு யாத்திரிகர்கள் செல்லும்பாதையில் இரண்டு குண்டுவெடிப்புச் சம்பவங்களில் 8பேர் கொல்லப்பட்டுள்ளனர். (உ-7)

## மத்திய அமைச்சராக
## அஜித்சிங்

[புதுடில்லி]
மத்திய அமைச்சரவையில் அஜித்சிங்சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்.

புதுடில்லியில எளிய முறையில் பதவியேற்றுக் கொண்ட அஜித்சிங்கிற்குவேளாந்துறை வழங்கப்பட்டிருக்கிறது. (து)

# இரண்டாம் கட்டப் பேச்சுக்களுக்கு தயார்
## முஷாரப் அறிவிப்பு

(இஸலாமபாத்)
இரண்டாம் கட்டப்பேச்சு வார்த்தை நடத்துவதற்கு வாஜ்பாயை அழைத்திருப்பதாக பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் முஷாரப் தெரிவித்தார்.

இஸ்லாமாபாத்தில் நிகழ்த்திய தொலைக்காட்சி உரையொன்றிலே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பேச்சுக்கள் முடிந்துவிடவில்லையென்றும் எவ்வளவு விரைவில் நாலும் இந்தியப் பிரதமரும் விட்ட குறையிலிருந்து பேச்சைத் தொடரலாமோ அவ்வளவு விரைவில் தொடரவேண்டும் என்றும் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபைக்கூட்டத்திற்குமுன் இருவரும் சந்தித்து பேச்சுவார்த்தையைத் தொடர்வது நல்லது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

காஷ்மீர் இந்தியாவிற்கு எவ்வளவு முக்கியத்துவமோ அவ்வளவு எங்களுக்கும் அதில் முக்கியத்துவம் உண்டு என்று முஷாரப் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில் பாகிஸ்தான் வெளியுறவுச் செயலரும் இந்திய வெளியுறவுச் செயலரும் சார்க் மாநாடு தொடர்பான கூட்டத்தில் கலந்து கொள்ளும்போது ஆக்ரா மாநாட்டு விடயங்கள் தொடர்பாக பேசுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (து)

## உலக தரிசனம்

# ஏழைநாடுகளுக்கு முன்னுரிமை கொடுத்து உதவத் தீர்மானம்

ஜி-8 நாடுகளில் மூன்று நாள் கூட்டத்தின பின் விடுத்த கூட்டு அறிக்கையில் ஏழை நாடுகளுக்கு உதவுவதை முன்னுரிமை கொடுத்துச் செயற்படுவதென தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று நாட்களாக இத்தாலியிலுள்ள ஜெனோவா நகரத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் தென்னாபிரிக்காவிலுள்ளமிகவும்வறிய நாடுகள் உட்பட உலகிலுள்ள மற்றைய வறியநாடுகளுக்கும் உதவுவதென்று அவ்வறிக்கை தெரிவிக்கிறது.

உலகமயமாக்கல் மூலம் ஏழைநாடுகளுக்கு உதவும் திட்டத்தை விரிவுபடுத்த இருப்பதாக அந்தஅறிக்கை மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (து)

# நடிகர் திலகம் சிவாஜிகணேசனின் இறுதிக் கிரியைகள் நேற்று
## பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்பு

(சென்னை)
கடந்தசனி இரவுகாலமான நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் இறுதிச் சடங்கு நேற்று நடைபெற்றது.

காலை 9.00 மணிக்கு நடிகரின் தியாகராஜநகர் இல்லத்தில் இருந்து இலட்சக் கணக்கான மக்கள் புடைசூழ பெசன்ட் நகர் நோக்கி மலர்களால் அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் கண்ணாடிப் பெட்டியில அவரது பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்ட போது அவரது ரசிகர்கள் உணர்ச்சி வசப்பட்ட நிலையில காணப்பட்டனர்.

2 மணிநேரத்தின் பின்னர் ஊர்வலம பெசன்ட் நகரின் சார மயானத்தைச் சென்றடைந்ததும் பாதுகாப்புப் படையினர் 3 தடவைகள் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்க்க அவரது பூதவுடல்தகனம் செய்யப்பட்டது.

இந் நிகழ்வில் இந்தியதிரைப்பட நடிகர்கள பட முதலாளிகள் தொழிலதிபர்கள் அரசியல் வாதிகள் எனப் பலர் கலந்து கொண்டு தமது அஞ்சலியைச் செலுத்தினர். (உ-து)

# இந்தியாவுடன் கூட்டு வைக்க அமெரிக்கா தயாராகவுள்ளது
## பிரதிநிதி தெரிவிப்பு

(வாஷிங்டன்)
பொருளாதாரம் மற்றும் பாதுகாப்புத் துறைகளில் இந்தியாவுடன் கூட்டு வைத்துக்கொள்ள ஜோர்ஜ்புஸ் விரும்புவதாக அமெரிக்க பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்திய வர்த்தக அமைச்சர் முரசொலி மாறனை அமெரிக்க வர்த்தக வாணிபப் பிரதிநிதி றொபேட ஆர். ஜெலோ வாஷிங்டனில் சந்தித்த போதே இவ்வாறு அவரிடம் தெரிவித்துள்ளார். (க-து)

# இந்தோ. ஜனாதிபதியாக உபஜனாதிபதி மேகவதி தெரிவாக சந்தர்ப்பம்

(ஜகார்த்தா)
இந்தோனேஷியாவின் ஜனாதிபதி அப்துல்ரஹ்மான் வாஹிட் பதவி விலக்கப்பட்டு அடுத்த சில நிமிடங்களில அந்நாட்டு உதவி ஜனாதிபதி மேகவதி சுகர்னோ புத்ரி ஜனாதிபதியாகத்தெரிவு செய்யப்படவுள்ளதாக இந்தோனேஷியாவின் அதியுயர்பீடமான மக்கள் ஆலோசனைச் சபையின் தலைவர் ஏனியன் றெமிஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதி வாஹிட் அவசரகாலச் சட்டத்தை பிரகடனம செய்துள்ளதானது, சட்டவிரோதமானதென்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது

அத்துடன், மக்கள் ஆலோசனை சபையைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கில்லை என்றும் உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது. [உ-07]

# நேபாளத்தில் ஆர்ப்பாட்டம் பாடசாலைகள் ஸ்தம்பிதம்

(காட்மண்டு)
நேபாளத்தில் மாவோ தீவிரவாத மாணவர் அமைப்பு ஒழுங்கு செய்த மாணவர்கள் போராட்டம் ஒன்று நடைபெற்றது.

வெள்ளிக்கிழமை நடைபெற்ற இப்போராட்டத்தில் 35 ஆயிரம் கல்லூரி, பாடசாலை மாணவர்கள் பங்குபற்றியுள்ளனர்.

இதனால் 25 ஆயிரத்து 500 அரசபாடசாலைகளும 8 ஆயிரம் தனியார் பாடசாலைகளும 239 கல்லூரிகளும் ஸதம்பிதம அடைந்ததாக நேபாளக் கல்வித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். (து)

# இந்தோனேஷியாவில் அவசரகால நிலை நாடாளுமன்றம் கலைப்பு

(ஜகார்த்தா)
இந்தோனேஷிய அதிபர் அப்துல்ரஹ்மான் வாஹிட் அவசரகால நிலையைப் பிரகடனப் படுத்தியதுடன், நாடாளுமன்றத்தையும் கலைத்துள்ளார்.

நாடாளுமன்றம் கூடுவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்பாக அதிபர் அப்துல் ரஹ்மான் வாஹிட் இந்த நடவடிக்கையை எடுத்தார்.

அப்துல் ரஹ்மான் வாஹிட்டின் அறிவித்தலை இந்தோனேஷிய தொலைக்காட்சி நாடு முழுவதும் ஒளிபரப்பியது. (து)

## தமிழகத்தில் கிருஷ்ணா நீர்

(விஜயவாடா)
திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு. கருணாநிதியின் வேண்டுகோளை ஏற்றே தமிழ் நாட்டிற்கு கிருஷ்ணா நதி நீர் திறந்து விடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இத்தகவலை ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு செய்தியாளர் மத்தியில் தெரிவித்துள்ளார்.

# வியக்க வைக்கும் விந்தை நிகழ்வுகள்

**★ நீ. நாயா? பன்றியா?**

நீ நாயா? என்று உங்களை யாராவது கேட்டால் சும்மா இருப்பீர்களா? ஆனால் சீனர்களிடம் இவ்வாறு நீ நாயா? பன்றியா? மாடா? ஆடா? என்று கேட்டால் கோபப்படாமல் சாவகாசமாய்ப் பதில் சொல்வார்களாம் வியப்பாக இருக்கிறதா? சேதி இது தான்.

அங்கு ஆண்டுகளுக்கு ஆடு, மாடு, பன்றி, நாய் என்று மிருகங்களின் பெயர்களைத்தான் வைத்துள்ளார்களாம். நீ நாய் ஆண்டில் பிறந்தாய் என்பதைத்தான் அவர்கள் சுருக்கமாக நீ நாயா? என்று கேட்கிறார்களாம்.

**★ நாய் வளர்க்கும் நாட்டோர்!**

நாய் வளர்ப்பதில் மோகம கொண்டவர்கள் அமெரிக்கர் தான். விதமவிதமான நாய்களை வாங்கி வளர்ப்பதில் அவர்களுக்கு அப்படி ஒரு அலாதி.

அமெரிக்கர்கள தாங்கள செல்லமாகவளர்க்கும்நாய்களுக்கு மட்டும் ஆண்டுக்கு 32.00 கோடி அமெரிக்க டொலரினை செலவழிக்கிறார்கள் என்றால் பாருங்களேன்.

-அவதானி-

வேண்டாமை அன்ன விழுச்
செல்வம் ஈண்டில்லை
யாண்டும் அஃதொப்ப(து)
இல்
குறள்

# வலம்புரி

## அமுதளிக்கும் நயினை அமுதசுரபி

ஈழத்து அம்மன் ஆலயங்களில் மணிபல்லவம் எனப் போற்றப்படும் நயினா தீவு நாகபூசணி அம்மன் ஆலயம் முதன்மையானது. அலைகடல் நடுவே வீற்றிருந்து வற்றாத அருளைப் பொழியும் நயினை அன்னையின் அருட்கடாட்சம் சொல்லும்தரமன்று.

அன்னையின் அருள் வெள்ளத்தை ஆழக்கடல் கடந்து கூடும் அடியார்களின் கூட்டத்தால் துலைய முடியும், நயினைத் தாயின் அதிசயங்கள் அற்புதங்கள் ஏராளம். அவற்றில் ஒன்றாக விளங்குவது அமுதசுரபி அன்னதான சபையாகும். நயினையில் கூடுகின்ற அடியார் கூட்டங்களெல்லாம், பெயருக்கேற்றவாறு அன்னம் அளித்து உபசரிக்கும் அச்சபையின் பணி தனிமனிதத்தால் ஆகமுடியாது, தமிழ்பதி வைத்திருந்த அட்சய பாத்திரம் போல பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு குறிப்பிட்ட நேரத்திற்கு தாராளமாக அமுதூட்டும் அந்த அற்புதமான பணி உலகெங்கிலும் காணமுடியாதது. அத்தாயின் அருட்கண் பார்வையினால் நயினை அமுதசுரபி அன்னதான சபையின் அரும்பணி நாற்பது வருடங்களை எட்டிவிட்டது. தொடர்ச்சியாக ஓர் அன்னதான சபை நாற்பது வருட காலத்தைக் கடந்துள்ளதெனில், அதன் தோற்றத்திற்குக் காரணகர்த்தாக்களாக இருந்தவர்களும் அவர்களின் வழியில் செவ்வனே நடத்திச்செல்பவர்களும், செல்பவர்களும் பாராட்டுதற்குரியவர்கள், அன்னை அருட் பார்வைக்குரியவர்கள்.

அவ்வகையில் ஆடிப்பூர நன்னாளாகிய இன்று அமுதசுரபியின் ஆரம்பகர்த்தாக்களான இருபத்தைந்து பேரின் உருவப்படத்திரை நீக்கம் நடைபெறுவது மகிழ்வுக்குரியது.

புகழுக்கும், பெருமைக்குமாக சேவை செய்யும் இவ்வுலகில் மறைந்து நின்று, அமைதியாக பல்லாயிரக்கணக்கான அடியார்களுக்கு திரு அமுது அளிக்கும் மணிபல்லவத்து அன்னையின் அமுதசுரபியின் பணி மேலும் வளரட்டும்.

அப்பணிக்கு நிதிகுறைந்தவர்கள் காசுகள் வழங்கியும், நிதி மிகுந்தவர்கள் பொற்குவை கொடுத்தும், உண்டி கொடுக்கும் பணிக்கு உதவவேண்டும்.

# மூலிகைகள் கொண்டு முக்கிய நோய்களை கைவைத்தியம் மூலம் தீர்த்துக் கொள்ளலாம்

(மூலிகைகளைக்கொண்டு முக்கியமான நோய்களைக் கை வைத்தியம் மூலம் தீர்ப்பதற்கான ஆலோசனைகள் கீழேதரப்படுகின்றன.

### 1) தலைமயிர் உதிராதிருக்கவும் முளைக்கவும்

நவச்சாரத்தை தேனில் 6 மணி நேரம் ஊறவைத்து எடுத்து அரைத்து மயிர் உதிரும் இடத்தில் பூசிவரின் நாளடைவில் மயிர் உதிர்வது நிற்கும்.

கரிய போளத்தை அரிசி கழுவிய நீர் விட்டரைத்து மயிர் உதிர்ந்து வழுக்கையான இடத்தில் தடவிவரின் நாளடைவில் மயிர் மீண்டும் முளைக்கும்.

### 2) நரைமயிர் கறுக்க

## மருத்துவ விளக்கம்

கரிய போளத்தை நெல்லிக்காயின் சாற்றில் அரைத்துப் பூசிவர நரைமயிர் செம்பட்டைமயிர்கறுத்து வளரும்.

### 3) புழுவெட்டுதல்

ஆனைத்தந்தத்தை சுட்டுப் பொடியாக்கிய சாம்பரை தேனில் குழைத்து புழு வெட்டிய இடத்தில் குழைந்து 8 நாட்கள் தடவிவரின் மயிர் முளைக்கும்.

நேர்வாளத்தைக் கடைந்து எடுத்த வெண்ணெயில் அரைத்து புழுவெட்டிய இடத்தில் பூச அவ்விடம் புண்ணாகும். பின் புண்ணை ஆற்ற சிகிச்சை செய்ய மயிர் முளைக்கும்.

### 4) தலைப்பேன் இறப்பதற்கு

சீமைக்காரத்தைப் பொரித்துப் பொடி பண்ணி வெய்யிலில் வைத்து நீரில் கரைத்து தலையில் பூசி 3 மணி நேரம் சென்ற பின் முழுகி வந்தால் பேன், ஈர் என்பன அற்றுப் போய் விடும்.

### வாய் அவியலுக்கு:-

1. கீழ்க்காய் நெல்லி இலை, அகத்தியிலை, கிழுவங்காய் இவற்றிலொன்றை வாயில் போட்டு சப்பி 2 நிமிடத்தின் பின் துப்ப மாறும். இப்படி 3 தரம் செய்துவரவும்.
2. தேங்காய்ப்பால்நல்லெண்ணெய் கலந்து வாய் கொப்பளித்தாலும் சுகம் தரும்.
3. வயிற்றில் அவியல் இருந்தாலும் அதன் சூட்டினால் வாயவியல் இருக்கும் இதற்கு வயிறு அவியலுக்கு சிகிச்சை செய்ய வாயவியல் மாறும்.

### முகப் பருவிற்கு:-

1. முகத்தில் எண்ணெய் தன்மை தோன்றியவுடன் குளிர்ந்த நீரினாலும் வெந்நீரினாலும் மாறி மாறிக் கழுவுதல் வேண்டும். இப்படித் தொடர்ந்து செய்து வந்தால் பரு நீங்கும்.
2. புற்றுமண்ணை நீர் விட்டு பசை போல் அரைத்து முகத்தில் பூசி ½ மணியின் பின்மேற் கூறியவாறு முகம் கழுவினால் முகப்பரு நீங்கும்.
3. வேதனையுடன் முகப்பரு கூடுதலாகவும் பெரிதாகவும் இருந்தால் மணித்தக்காளி இலைச்சாறு 1 தேக்கரண்டி எடுத்து 3 மிளகு உரைத்து பருவில் பூசின் வேதனை நீங்கிபரு அமரும்.
4. இரண்டு கரண்டி கடலைமா (சுத்தமானது) ஒணக்காக சுத்தமான ஆமணக்கு எண்ணெய் சேர்த்து குழப்பி இரவில் முகத்திற்கு பூசிக் கொண்டு படுத்து றங்கி காலையில் அதை சீயாக்காயால் நன்றாக கழுவிவிடல் வேண்டும். இப்படியாக சில நாட்கள் செய்துவரின் முகப் பருக்கள் மறைந்து விடும்.

### நாள் பட்ட மலேரியாக காய்ச்சலுக்கு

5 கிராம் கழற்சிப் பருப்பையும், 5 கிராம் மிளகையும் இடித்து அரைத்து அதில் மூன்று விரலால் தூள் எடுத்து 1 மேசைக்கரண்டி எலுமிச்சம் பழச்சாறு 1 தேக்கரண்டி வேப்பம் பட்டை கசாயம் 1 தேக்கரண்டி சீனி ஒன்றாகக்கலந்து ஒரு நாளைக்கு மூன்றுதரம் 2 மேசைக்கரண்டி 3 நாள் குடிக்க காய்ச்சல் அகன்று விடும்.

### மாறாத நாள்பட்டஇருமலுக்கு

நாயுருவியை வேருடன் பிடுங்கி இடித்து சாறு பிழிந்து 1 அவுன்ஸ் எடுத்து அதில் 1 தேக்கரண்டி கற்கண்டு

## டாக்டர் ஏ. எஸ். மகாலிங்கம்

அரவிந் கிளினிக் வவுனியா

தூளைக்கலந்துஒருநாளைக்கு இருதரம 7 நாளைக்கு உட்கொள்ள மாறாத இருமலும் மாறும்.

### மாறாத நாள்பட்ட கடி சிரங்குக்கு

1. வேப்பந்துளிர், புளியமிலை, தொட்டாற்சுருங்கி, பொன்னாவரசு, கறிமஞ்சள் 1 துண்டு, சமமாக எடுத்துஎலுமிச்சம் புளிவிட்டு அரைத்து உடல் அடங்கலும்பூசி ½ மணி நேரம் ஊறியபின் வெந்நீரில் குளிக்க வேண்டும்.
2. மேற்படி குளித்தவுடன் ஈரம் காய்ந்ததும 'பச்சை எண்ணெய் எனும் எண்ணெயை தகுந்த வைத்தியரிடம் வாங்கி உடல்முழுவதும் பூசவும் இப்படித்தொடர்ந்து ஒன்று விட்டு ஒரு நாளைக்குப பூசி குளித்து எண்ணெய் பூச கடிசிரங்கு இருந்தஇடம் தெரியாமல் மறைந்து விடும்.

### நுளம்பு கடிக்கு

வேப்பம்இலை அல்லது எலுமிச்சம் பழகோதுகளை கை, கால்களில் உரஞ்சிக் கொண்டு படுத்தால் நுளம்புகள் அணுகாது.

### உடலில் ஏற்படும் பாலுண்ணிக்கு

அதிகாலையில் எழுந்தவுடன் வாயிலிருந்துவருமஉமிழ் நீரால் பாலுண்ணிக்குப் பூசிவரின் நாளடைவில் அற்றுப் போகும்.

2. சதுரக்கள்ளிப்பாலை பாலுண்ணியின் மீது தடவி உண்ணியை புண்ணாக்கி புண்ணுக்கேற்ற சிகிச்சை கொடுக்க அற்றுப் போகும்.

### உணவில் உண்டாகும் வெறுப்புக்கு

மகிழம பூ அல்லதுமனோரஞ்சிதப்பூ ஏதாவது ஒன்றை 10 நிமிடமமுகர்வதால் வெறுப்பு நீக்கப்படும்.

### கொட்டாவிக்கு

சுக்கு-சிறுதுண்டு, மிளகு 2 சப்பித்தின்று சாரத்தைவிழுங்கினால் உடன் கொட்டாவி நிற்கும்.

### செங்கண்மாரி

காலையில் பழங்கஞ்சியைத் தலையில் தப்பி ஸ்நானம் செய்த பின் மருந்து 3 நாள் உட்கொள்ள வேண்டும். இந்த 3 நாளும் பாலும் சோறும் பத்தியமாகஉண்ணவேண்டும்

### செங்கண்மாரி சிகிச்சை

1. பசும்பால் கறந்தவுடன் 1 அவுன்ஸ் எடுத்து 1 தேக்கரண்டி கீழ்க்காய் நெல்லிச்சாறு விட்டு ஒரு நாளைக்கு 3 தரம் ½ அவுன்ஸ் வீதம் 3 நாளைக்கு குடிக்க நோய் தீரும்.
2. நற்சீரகம், கொத்தமல்லி அதிமதுரமவகைக்கு 5 கிராம் எடுத்து இடித்து தூளாக்கி அவற்றில் 1 தேக்கரண்டி கீழ்க்காய் நெல்லிச்சாறு 2 தேக்கரண்டி காய்ச்சிய பசுவின் பால் விட்டுக் கலக்கி 1 நாளைக்கு 3 தரம் 1½ அவுன்ஸ் வீதம் 3 நாளைக்குக் குடிக்க நோய் தீரும்.

# ஆடிப் பூரநன்னாளில் அம்பிகையைவழிபட்டால் நாடும் வரம்பெற்று நல்வாழ்வு வாழலாம்

இறைவழிபாட்டிற்கு உகந்த நாள்களும் நட்சத்திரங்களும் சிறப்பிடம் பெறுகின்றன. மாதந்தோறும் வரும நட்சத்திரங்களிற் சில குறிப்பிடக்கூடியனவாக வகுக்கப்பட்டுள்ளன. திருவாதிரை சிவவழிபாட்டிற்கும், திருவோணம் மகாவிஷ்ணுவிற்கும, கார்த்திகை விசாகம் முருகனுக்கும் சிறப்பாகக் கொள்வது போல பூரநட்சத்திரம் அம்பிகையின் வழிபாட்டிற்குச் சிறப்பாகக் கொள்ளப் படுகின்றது.

பூரநன்நட்சத்திரத்திலேயே அன்னை பராசக்தி திருவவதாரம் செய்தருளினார் என்றும் அன்னை பூப்பெய்திய நாளே ஆடிப்பூர நன்னாள் எனவும், ஆடிப்பூர தினத்திலே அம்பிகைக்கு ருதுசாந்தி எனப்படும் பூரகர்ம வழிபாடுகளும் ஊஞ்சல் வழிபாடுகளும செய்து மக்கள் விரதம் அனுஷ்டித்து சக்தி வழிபாடு செய்வார்கள.

### ஆடிமாதப் பூர நட்சத்திரம்

மாதந்தோறும பூரநட்சத்திரம வந்தாலும் தெட்சணாயணம் ஆரம்பிக்கும; ஆடி மாதத்தில வரும் பூரநட்சத்திரம்வகு சிறப்பாக அம்பிகை வழிபாட்டிற்கு உகந்ததாக கொண்டாடப்படுகின்றது. ஆடிப்பூரமும், வெள்ளிக்கிழமையும சேர்ந்துவரின் அது தனிச்சிறப்புடையதாக மக்கள் கொண்டாடி வழிபடுவார்கள். ஆடிப்பூர நட்சத்திரத்திலே ஆலயங்களில் விசேட வழிபாடுகள் நடைபெறுகின்றன.

அம்பாள் ஆலயங்களிலும் அம்பிகையின்சுற்றுப்பிரகாரங்கள் உள்ள ஆலயங்களிலும் கூட ஆடிப்பூரநட்சத்திர நாள் சிறப்பாக அபிஷேக ஆராதனைகளும், பூர கர்ம வழிபாடுகளும, ருதுசோபன விழா, ஊஞ்சல் வழிபாடுகளும் செய்யப்படுகின்றன.

## நீர்வைமணி

இந்நாள சக்திவழிபாட்டின் வாழ்க்கையுடன் இணைந்த தத்துவத்தை நன்கு உணர்த்துவதாக உள்ளது.

### மானிட வாழ்வின்உயிர்நாடி

ஆடிப்பூரத்தில் அம்பிகையை வழிபாடு செய்யும் முறைகள் மக்கள வாழ்வில் தாய்மையைப் பெருமையுடன் போற்றும் தனிச்சிறப்பினையும் உலகியல் வாழ்வில் சக்தி வழிபாடு எவ்வளவுக்கு எவ்வளவு உண்மைத்தத்துவ பூர்வமாக பின்னிப்பிணைந்துள்ளதென்பதையும தெளிவுபடுத்துவதாக உள்ளது. மானிடவாழ்விற்கு அத்தியாவசியமான அட்ட ஐஸ்வர்யங்களும், அட்டலட்சுமிகளாக ஆன்றோர் வகுத்திருப்பதிலிருந்து மானிட வாழ்வின் உயிர்நாடி உலகமகாசக்தியாகிய தாய்மையுடன் இணைந்த பேரருட்சக்தியென்பது புலனாகின்றது.

இத்தகுபெருஞ்சிறப்பிற்குரிய சக்திவழிபாட்டிற்குரிய ஆடிப்பூர நன்னாளிலே நாமும அம்பிகையை வழிபட்டு நலம் பெறுவோமாக.

'அம்பிகையைச்சரணடைந்தால்.

அதிகவரம்பெறலாம்''

## தினசரி தியானம்

### மனச்சாட்சி

உள்ளிருக்கும் ஒண்பொருளே, உன்னை நான் உலகெலாம் தேடியலைகிறேன். என்னே!

ஒவ்வோர் உயிர்க்கும உயிராய் மனத்தினுள் தெய்வம் மனச்சாட்சியாய் எழுந்தருளியுள்ளது. ஆனால் அதை இன்னதென்று சுட்டிக் காட்ட இயலாது. பின்பு அதைப் புறக்கணிக்கவும இயலாது தன் போக்கில் தன் காரியத்தை அது நிறைவேற்றுகிறது. நமது ஆணவம தலையெடுத்திருக்கும் போது மனச்சாட்சி மறைந்திருக்கிறது. ஆணவத்தை ஒதுக்கி வைத்து விட்டு அமைதியுற்றிருக்கும் போது மனச்சாட்சி பேசுகிறது.

நீக்கப்பிரியா நினைக்க மறக்கக்கூடாப்
போக்குவரவற்ற பொருளணைவ தெந்நாளோ.

— தாயுமானவர் —

ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்

# ஆட்சியை தக்கவைக்கு இரகசிய திட்டம் ஜனாதிபதியிடம் உண்டு

## ஏஜென்சி செய்திகள் தகவல்

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு தற்போது எதிர்நோக்கியிருக்கும் அரசியல் நெருக்கடியை தணிக்க, ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க, இரகசியத் திட்டமொன்றை உருவாக்கியுள்ளாரென்று, சர்வதேச செய்தி ஏஜென்சியொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசை தொடர்ந்தும் தக்கவைத்துக்கொள்ளவும், ஆட்டம்கண்டுள்ள அரசை ஸ்திரப்படுத்தும் வகையிலும் இவ் இரகசியத் திட்டத்தை விரைவில் ஜனாதிபதி நடைமுறைப்படுத்தவுள்ளார்.

இவ் இரகசியத்திட்டத்தை ஜனாதிபதி மனதில் வைத்துக்கொண்டே. புதிய அரசியல் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதில் விருப்பமில்லாத அரசியல்வாதிகள் பொதுஜன ஐக்கியமுன்னணி அரசிலிருந்து வெளியேறிச் செல்லலாமென பகிரங்கமாக தெரிவித்துள்ளாரென்று அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை ஜனாதிபதி தனது அரசாங்கத்தை காப்பாற்றி தனது அரசியலை தொடர்ந்தும் நகர்த்த மேற்கொண்ட இறுதி உபாயமே இவ் இரகசிய திட்டமென்று கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரவலாகப் பேசப்படுகிறது. (இ)

# குற்றவாளிகளான பொலிஸாரை கைதுசெய்வதில் பாரபட்சம்

## நீதிபதி குற்றச்சாட்டு

[கொழும்பு]

ஐக்கியதேசியக்கட்சி கடந்த 19ம் திகதி நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது கட்சி ஆதரவாளர்கள் கொல்லப்பட்டமைக்கு சூத்திரதாரிகளாக இருந்த மூன்று பொலிசாரும் நேற்று நீதி மன்றில் ஆஜர்செய்யப்படவில்லை.

மூன்று பொலிசாரையும் கைதுசெய்யுமாறு நீதிபதி உத்தரவிட்டிருந்த போதும் அவர்கள் கைது செய்யப்படாததையிட்டு நீதிபதி ஜரணி ஜெயசுந்தர கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதற்கு பதிலளித்த பொலிசார் சந்தேக நபர்களான மூன்று பொலிசாரும் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருவதை அறிந்து அங்கு சென்று பார்த்த போது அப்படி எவரும் ஆஸ்பத்திரியில் இல்லை யென நீதிமன்றில் தெரிவித்தார்.

எந்த விடயத்திலும் பொலிசார் குற்றவாளியாகக்காணப்படுகின்றபோது அவர்களை சக பொலிசார் கைதுசெய்யாமல் விடுவது சகஜம் என்றும், பாரபட்சம் காட்டப்படுவதாகவும் பொலிசார் மீது குற்றம் சாட்டிய நீதிபதி சம்பந்தப்பட்டவர்களை உடன் கைதுசெய்யுமாறு உத்தரவிட்டுள்ளார் [வ]

## ஐ.தே.கட்சியின் குழு இன்று கூடும்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்றக்குழுவும்செயற்குழுவும் இன்று கொழும்பில் கூடவுள்ளன.

இக்கூட்டத்தில் அரசுக்கெதிரான அடுத்தகட்ட நடவடிக்கை பற்றி ஆராயப்படவுள்ளதாகவும் அவைதொடர்பாக இறுதிமுடிவுகள் எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இம்மாதம் 25ந்திகதிமுதல் அடுத்தமாதம் 4ந்திகதி வரைபெரகராநடைபெறவிருப்பதால் 27ந்திகதி கண்டியில் நடைபெறவிருந்த ஆர்ப்பாட்டப் பேரணியை ஐக்கியதேசியக்கட்சி ஒத்திவைத்துள்ளது. (வ)

## நிபந்தனையற்ற

யாழ்பல்கலைக்கழக மாணவர்களாகிய நாம் இதுவரையில் நியாயமான கோரிக்கைகளுக்காக ஜனநாயகரீதியிலான செயற்பாடுகளை நடத்திவந்தோம். எந்தவிதமான வன்முறைகளிலும் நாம் ஈடுபடவில்லை அத்துடன் வன்முறைகளில் ஈடுபடும்படி எவரையும் தூண்டவும் இல்லை. பல்கலைக்கழக சொத்துக்களுக்கோ அல்லது பொதுச் சொத்துக்களுக்கோ எவ்வித சேதத்தையும் ஏற்படுத்தவில்லை.

ஆனால்! மாணவர்களது அடிப்படைஉரிமைகள் மனித உரிமைகள் எல்பனமீறப்படும்போது அப்பாவிப் பொதுமக்களுக்கு எதிரான மனித உரிமைமீறல்களுக்கு எதிராகவும் ஜனநாயகரீதியாககுரல் கொடுத்து வந்துள்ளோம்.

எமதுஜனநாயக ரீதியான செயற்பாடுகளை உங்களுக்கு திரிவுபடுத்தி வேண்டுமென்று யாரோ கூறியுள்ளனர். ஆதலால் இவ்வாறான உண்மைக்குபுறம்பான செய்திகளை நம்பி தாங்கள்விதித்த நிபந்தனையை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

எனவே இவ்விடையத்தில் நாட்டிலுள்ள ஏனைய பல்கலைக்கழக மாணவர்களுக்கு இருக்கும் ஜனநாயகஉரிமைகள் எமக்கும் கிடைக்க ஆவன செய்யுமாறு தங்களைகேட்டுக் கொள்கிறோமென அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## இறுதிச்சடங்கில் ரணில்

(கொழும்பு)

ஐக்கியதேசியக்கட்சி நடத்திய ஆர்ப்பாட்டத்தின்போது கொல்லப்பட்டவர்களின் இறுதி ஊர்வலத்தில் ஐக்கிய தேசியக்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கா, வி. ஆனந்தசங்கரி, எம். பி அ.விநாயகமூர்த்தி எம்.பி ஆகியோர்கலந்து கொண்டனர்.

## நடிகர்திலகத்

மைப்பாளர் இளையராஜா உட்பட அரசியல் தலைவர்கள், பெருந்திரளான ரசிகர்கள் என பெரும் எண்ணிக்கையானோர் இறுதி யாத்திரையில் கலந்துகொண்டனர்.

தந்தையின் சிதைக்கு மூத்த மகன் ராம்குமார் தீமூட்டினார்.

மற்றொரு செய்தி 6ம் பக்கத்தில்) (இ)

## ஜனாதிபதியின்...

குறித்து எம்முடன் பேசுவதாலஎந்தவிதபலனும் இல்லை என்றும் விடுதலைப் புலிகளுடன் பேசியே அவர்களின சம்மதத்துடன் அரசியல் அமைப்பை மாற்றித் தீர்வு காண்பதன் மூலம்தான் நிரந்தர சமாதானத்தைக் காண முடியும் என்றும் அவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (வ)

# லெப், செல்லக்கிளியின் 18-வது ஆண்டுநினைவுதினம்

## வன்னியில் அனுஷ்டிப்பு

(வவுனியா)

தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி லெப்ரினன்ட் செல்லக்கிளி அம்மானின் 18ம் ஆண்டு நினைவு தினம் நேற்று வன்னி பெருநிலப்பரப்பில உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது

திருநெல்வேலி பரமேஸ்வராசந்திக்கு அண்மையில், 1983ம் ஆண்டு இராணுவ வாகனம் மீது நடத்தப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலின் போது செல்லக்கிளிஅம்மான் உயிரிழந்தார்.

இத்தாக்குதலில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

மேற்படி கண்ணிவெடித் தாக்குதல் விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் தலைமையில் செல்லக்கிளி அம்மான் மற்றும் விடுதலைப்புலிகளின் மூத்த தளபதிகளான கப்டன் பாலரஞ்சன் லெப்ரினன் கேணல் விக்டர், லெப்ரினன் கேணல் புலேந்திரன், லெப்ரினன் கேணல் சந்தோசம், லெப்ரினன் கேணல் பொன்னம்மான். கேணல் கிட்டு கப்டன் லிங்கம், மேஜர் கணேஸ், அப்பையண்ணை, டகீர்காக்கா ஆகியோரால் இணைந்து நடாத்தப்பட்டது

இத்தாக்குதலில் இராணுவ ஆயுத உபகரணங்கள் கைப்பற்றப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (இ-5)

## காலிழப்பு

அரியாலையில நேற்றுக் காலை இடம்பெற்ற மிதிவெடிச்சம்பவத்தில்சிக்கி குடும்பஸ்தர் ஒருவர் தனது இடது காலை முழங்காலுக்குக் கீழ் இழந்துள்ளார். (இ-104)

## பல்கலை மாணவன்

★ எந்தவிதமான மறைமுக வேலைத்திட்டங்களின் அடிப்படையிலும் பல்கலைக்கழகம் பாடசாலைகள் மற்றும் யாழ்ப்பாணத்தின் நிறுவனங்கள் எதனதும் இயல்பான செயற்பாடுகளுக்கு குந்தகமாக இருக்கமாட்டார்கள் என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

★ இத்தகைய நடவடிக்கைகள் எதிலாவது பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் எதிர் காலத்தில் ஈடுபடுவது கண்டுபிடிக்கப்பட்டால் எதுவித முன்னறிவித்தலுமின்றி பல்கலைக்கழகம் மூடப்படும்.

எனவும் அவ் அறிவுறுத்தலில்தெரிவிக்கப்பட்டிருந்தது

மேலும் இந்த உறுதிப்படுத்துதல்கள் வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும்வடக்குகிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அவர்களுக்கும் 51வதுடிவிஷன் படையணித் தளபதி மேஜர் ஜெனரல் காமினி ஜயசுந்தர அவர்களுக்கும் தெரியப்படுத்தப்பட வேண்டுமெனவும் கேட்டிருந்தார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கேட்டுக்கொண்ட உத்தரவாதங்களை உள்ளடக்கியதாக மாணவர் ஒன்றியத்தின் பதில் அமையவில்லை.

மாணவர் ஒன்றியத்தினால் எழுதப்பட்ட பதில் கடிதத்தில் நியாயப்படுத்த முடியாததும் ஜனநாயக உரிமைகளை மறுப்பதாகவும் கூறப்பட்டிருக்கும் விடயங்கள் முற்றிலும் ஏற்கப்படமுடியாதவை.

இருந்த போதும் பெரும்பாலான பல்கலைக்கழக மாணவர்களினதும் பல்கலைக்கழக சமூகத்தினதும் ஒட்டுமொத்த நலன் கருதி யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் எவ்வித தடங்கலும் இன்றித் தொடர்வதற்கு வழி செய்யும்படி கல்வி உயர்கல்வி அமைச்சர் இந்திக குணவர்த்தனா அவர்களுக்கு அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா சிபாரிசு செய்துள்ளார்.

மேலும் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் தத்தம கல்விச் செயற்பாடுகளில் தீவிர அக்கறை காட்டவும் சமூகத்தின் ஒட்டுமொத்த நலன்களுக்கு உகந்த வகையில் செயற்பட முன்வர வேண்டுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கேட்டுக்கொண்டுள்ளார்.

# மரண அறிவித்தல்

## வயிரமுத்து-தம்புக்குட்டி

(ஓய்வு பெற்ற புகையிரத நிலைய ஊழியர் - பளை)

பளைநகரம், பளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாவும் கொண்ட வயிரமுத்து தம்புக்குட்டி [ஓய்வு பெற்ற புகையிரத நிலைய ஊழியர்] அவர்கள 23.07 2001 திங்கடகிழமை காலை சிவபதமெய்தி விட்டார்

இவர் காலஞ்சென்ற வயிரமுத்து-செல்லமுத்துதம்பதிகளின் ஏக புதல்வனும காலஞ்சென்ற தையலம்மாவின் அன்புக் கணவரும, காலஞ்சென்ற வல்லிபுரம் அன்னப்பிள்ளையின் மருமகனும், தருமராசா [ஓய்வூதியர்புகையிரத திணைக்களம்] தவமணி-தம்பித்துரை (அமெரிக்கா] தனபாலசிங்கம் (கனடா) திலகவதி (கனடா) ரேவதி (ஆசிரியர் பளை மத்தியகல்லூரி) தவராசா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவபவானி, சிவசந்திரன், லீலா, சறோ, சிவசுந்தரராஜா, ஆகியோரின் அன்பு மாமனாரும் அகிபன், சாமந்தி, தனுஷா, தேனுகா, சோபனா, சசிக்கா, கஜனி, ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின இறுதிக் கிரியைகள் [24 07-2001] செவ்வாய் இன்று காலை 10 30 மணிக்கு கோண்டாவிலில் உள்ள அன்னாரது தற்காலிக இல்லத்தில் ஈமக்கிரியைகள் நடைபெற்று கோண்டாவில இந்து மயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நிரந்தர முகவரி-
கண்டி வீதி,
பளை.

தற்காலிக முகவரி-
டிப்போ முன்பாக,
கோகுல வீதி,
கோண்டாவில்.

தகவல்-
த. தருமராசா
(மகன்)

(3379)


# மிற்சுயி (MITSUI) அட்லஸ் (ATLAS)

## - சீமெந்து விற்பனை -

இரு தினங்களில் வரவிருக்கும் மிற்சுயி (MITSUI), அட்லஸ் (ATLAS) சிமெந்துக்கான ஓடர்களை வாடிக்கையாளர்கள் அனைவரும் முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தொடர்பு:

ஜெசிபா ஏஜென்சி

135, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

T. P. 2407
FAX. 2140

(கி-2308)


இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001.ம் ஆண்டு யூலை மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.